வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 14.09.2024 சனிக்கிழமை | இதழ் : 257 | பக்கங்கள் : 12

# பிரதேசவாத பிரசாரம் மூலமாக கிழக்கு இழக்கப்படும் அபாயம்!

## சுரேஷ் பிறேமச்சந்திரன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 14

**“கிழக்கு மாகாணத்தில் பிரதேசவாதத்தை முன்னிறுத்தி தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராகப் பிரசாரம் செய்கிறார்கள். இவ்வாறு அவர்கள் பேசி கிழக்கு மாகாணத்தை சிங்களவர்களிடம் பறிகொடுக்க முயல்கின்றார்கள். இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் - இவ்வாறு ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் பொது வேட்பாளரின் தேர்தல் பணிமனையில் நேற்று வெள்ளிக்கிழமை நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக டக்ளஸ் தேவானந்தா, மட்டக்களப்பில் பிள்ளையான், வியாழேந்திரன் போன்றோர் பேசி வருகின்றனர். கிழக்கில் இரண்டு இராஜாங்க அமைச்சர்கள் இருந்தீர்கள். உங்களால் மேய்ச்சல் தரை பிரச்னையை தீர்க்க முடியவில்லை. இப்போதுகூட நீங்கள் அது தொடர்பில் 11



## தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு இன்று தேர்!

யாழ்ப்பாணம், செப். 14

பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6.45 மணிக்கு ஸ்தம்ப பூசையும் 7.30 மணிக்கு வசந்த மண்டப பூசையும் நடைபெற்று 9.30 மணிக்கு அம்பாள் தேரில் அவரோகணிப்பாள். நண்பகல் 12 மணிக்கு ரத ஆரோகணம் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயப் பெருந்திருவிழா கடந்த 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## ரணில் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்

யாழ்ப்பாணம், செப். 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

இன்றைய தினம் யாழ். நகரத்தில் விருந்தகம் ஒன்றில் நடைபெறும் தொழில் 11

## நவம்பர் 25இல் உயர்தர பரீட்சை!

கொழும்பு, செப். 14

2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சை எதிர்வரும் நவம்பர் 25ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நவம்பர் 25ஆம் திகதி ஆரம்பமாகும் உயர்தர பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் 20ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)



## மட்டக்களப்பில் நரபலி? மயானத்தில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, செப். 14

நரபலி கொடுக்கப்பட்டதாக நம்பப்படும்விதமாக மட்டக்களப்பில் மயானம் ஒன்றிலிருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

தேற்றாத்தீவிலுள்ள மயானத்திலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை சடலம் ஒன்றை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மீட்டனர். 11

## யாழ். அரசியல் போட்டியாலேயே மாகாண தேர்தல் நடக்கவில்லை!

### பிள்ளையான் தெரிவிப்பு

- லியோ அன்ரன் -

மட்டக்களப்பு, செப். 14

யாழ்ப்பாணத்தில் நடந்த அரசியல் போட்டியாலேயே மாகாண சபைகளுக்கான தேர்தல் நடக்காது போனது - இவ்வாறு பிள்ளையான் என்று அறியப்பட்ட இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாக மட்டக்களப்பு - கூழாவடியில் நேற்று நடந்த பிரசார கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “1989ஆம் ஆண்டுக்கு பின்னர் மாகாண சபை முறைமை துருப்பிடித்துப் போயிருந்தது. 2007ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபையில் 11

## அநுர ஆட்சிக்கு வந்தால் இரத்த ஆறுதான் ஓடும்!

### எச்சரிக்கிறார் பிரதமர் தினேஷ்

கொழும்பு, செப். 14

“மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க கொலையாளி. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனநாயகவாதி. இருவரில் எவர் வேண்டும் என்பதை எதிர்வரும் 21ஆம் திகதி நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். தவறியேனும் அநுர குமார ஆட்சிக்கு வந்தால் நாட்டில் மீண்டும் இரத்த ஆறு தான் ஓடும்.” - என்று பிரதமர் 11

## வாகன இறக்குமதி தடை பெப்ரவரியில் நீக்கப்படும்

கொழும்பு, செப். 14

அனைத்து வாகனங்களுக்குமான இறக்குமதித் தடையை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நீக்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணி கையிருப்பு கணிசமான அதிகரிப்பு, ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு போன்ற காரணங்களின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

## நீதிபதி கணேசராஜா பதவி இடைநிறுத்தம்

திருகோணமலை, செப். 14

திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா நேற்று வெள்ளிக்கிழமை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பதவி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படியே அவர் பதவி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இதனால், ஜனாப் பயாஸ் ரசாக் மாவட்ட நீதிபதியாகவும், ஜீவராணி கருப்பையா பிரதம நீதிவான் நீதிமன்ற நீதிவானாகவும் நேற்று மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர். (ஐ)

## கஜேந்திரன் எம். பி. கைதாகி விடுதலை!

கிளிநொச்சி, செப். 14

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் நேற்று கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு கோரி பிரசாரத்தில் ஈடுபட்டுவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியினர் கிளிநொச்சியில் நேற்று 11

## யாழ். - கொழும்பு ரயில் சேவையை ஆரம்பிப்பதில் குழப்ப நிலைமை!

யாழ்ப்பாணம், செப். 14

யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவை எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதில் குழப்ப நிலைமை காணப்படுகின்றது என்று தெரிய வருகின்றது. இந்த நிலையில், மாஹோ முதல் அநுராதபுரம் வரையான பரீட்சார்த்த ரயில் பயணம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மாஹோ முதல் அநுராதபுரம் வரையான ரயில் பாதை 9.2 கோடி டொலர்கள் செலவில் புனமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாதை 11

## ‘சங்கு’ க்கு மாத்திரமே புள்ளடியிட வேண்டும்

### பொது வேட்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 14

“ஜனாதிபதித் தேர்தலில் சங்கு சின்னத்துக்கு மாத்திரமே வாக்களியுங்கள். ஏனையவர்களுக்கு விருப்பு வாக்குப் போட வேண்டாம்”, என்று தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகீழ் பருவக்காற்றின் மூலம் அதிகமழை கிடைக்க வாய்ப்பு

## கலாநிதி பிரதீபராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 14

வடகீழ் பருவக்காற்று மூலமாக ஆண்டு சராசரியைவிட சற்று அதிக மழை கிடைக்கும். அத்துடன், வங்காள விரிகுடாவில் 5 தாழமுக்க வலயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்று யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை தலைவர் கலாநிதி நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இட்ட பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

2024ஆம் ஆண்டு வடகீழ் பருவக்காற்று மழை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆண்டு சராசரியை விட சற்று கூடுதலாக - அதாவது 550 மில்லிமீற்றரைவிட சற்று கூடுதலாக திரட்டிய மழையாக கிடைப்பதற்கான வாய்ப்புள்ளது. அத்துடன், இந்த ஆண்டுக்கான பருவமழையின் முதலாவது உடைவு ஒக்ரோபர் நடுப்பகுதிக்குள் ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வழமைபோன்று இவ்வாண்டும் மூன்று தொடக்கம் 5 தாழமுக்கக நிகழ்வுகள் வங்காள விரிகுடாவில் தோற்றம்பெற்று அவற்றின் செல்வாக்கால் வடகீழ் பருவமழை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்து சமுத்திர வெப்பச் சுட்டெண்ணும், எல்நினோவின் தெற்கு ஊசலாட்டமும் நடுநிலைமையில் இருப்பதனால் மிகப்பெரிய அளவில் மழை கிடைக்கும் என இவ்வாண்டு எதிர்பார்க்க முடியாது. ஆனாலும், இவ்வாண்டும் முதல் குறிப்பிட்டது போன்று மூன்று தொடக்கம் ஐந்து தாழமுக்க நிகழ்வுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

முதலாவது தாழமுக்க நிகழ்வு ஒக்ரோபர் 20ஆம் திகதியில் இருந்து நவம்பர் 5ஆம் திகதிக்குள்ளும் இரண்டாவது தாழமுக்க நிகழ்வு நவம்பர் 15ஆம் திகதியிலிருந்து 28ஆம் திகதிக்கிடையிலும் மூன்றாவது தாழமுக்க நிகழ்வு நவம்பர் 28ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 5ஆம் திகதிக்குள்ளேயும் நான்காவது தாழமுக்க நிகழ்வு டிசெம்பர் 10ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 25ஆம் திகதிக்கிடையிலும் ஐந்தாவது தாழமுக்க நிகழ்வு டிசெம்பரின் கடைசிப் பகுதிக்கும் 2025 ஜனவரியின் முதல் வாரத்துக்குமிடையில் நிகழ்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

குறிப்பாக, இந்த தாழமுக்க நிகழ்வு சந்தர்ப்பங்களில் சராசரியாக 24 மணித்தியாலத்துக்குள் 125 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட மழை கிடைப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. இவ்வாண்டு மூன்று தொடக்கம் 5 தாழமுக்க நிகழ்வுகள் இடம்பெற வாய்ப்பு இருந்தாலும் கூட வடக்கு மாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் மூன்று தாழமுக்க நிகழ்வுகளே பெரும் மழையை கொடுக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. புயலைப் பொறுத்தவரையில் இந்த 2024 ஆம் ஆண்டு வடகீழ் பருவக்காற்று காலப் பகுதியில் இரண்டு புயல்களுக்கான வாய்ப்புகள் காணப்பட்டாலும் கூட ஒரு புயலே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாண்டின் காற்று வீசல் பெரும்பாலான சந்தர்ப்பங்களிலும் மணிக்கு முப்பது முதல் ஐம்பது கிலோமீற்றர் வரை இருக்கும் என எதிர்வு கூறப்பட்டாலும் கூட தாழமுக்க காலங்களில் இந்த அளவு மாற்றம் அடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு பருவமழை கிட்டத்தட்ட சராசரியை விட 50 தொடக்கம் 100 மில்லிமீற்றர் அதிகமாக இருக்கும் என எதிர்வு கூறப்பட்டாலும்கூட தாழமுக்க சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற மழை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மூன்று தடவைகளுக்கு மிகச் செறிவாக கிடைக்கும் வாய்ப்பு இருப்பதால் அக்கால பகுதிகளில் வெள்ளப்பெருக்குகளுக்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, இவ்வாண்டு பருவமழையை பொறுத்தவரையில் தாழமுக்ககத்தோடு கூடிய செறிவான மழை கிடைக்கும் என்பதோடு காற்று வீசலும் சற்று அதிகமாக அதாவது 30 முதல் 50 கிலோமீற்றர் என்ற சராசரிகளில் வீசும் என எதிர்பார்க்கப்படுவதனால் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இந்த மாதம் இறுதி பகுதியில் அல்லது அடுத்த மாதத்தில் முதல் வாரத்தில் மேற்கொள்வதன் ஊடாக இந்த ஆண்டின் வடகீழ் பருவக்காற்று காலப் பகுதியில் நமக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை இயலுமான அளவில் குறைக்க முடியும்.

அந்த அடிப்படையில் நமது வாழிடங்கள் மற்றும் வேலையிடங்களுக்கு அண்மித்த இயற்கையான மற்றும் செயற்கையான வடிகால் அமைப்புகள் துப்புரவாக்கப்பட்டு இலகுவாக மழை நீர் வடிந்து ஒடக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும். எங்களுடைய வாழ்விடங்கள் அல்லது வேலை இடங்களுக்கு அண்மித்து காணப்படும் கடும் காற்றினால் பாதிக்கப்படக்கூடிய மரங்களின் கிளைகளை கத்தரித்து அல்லது அவற்றின் விதானங்களின் அளவை குறைப்பதன் ஊடாக கடும் வேகமான காற்றினால் மரங்கள் முறிந்தோ அல்லது வேருடன் பாறியோ வீழ்வது தடுக்க முடியும். எங்களுடைய பிரதேசத்தில் இயற்கையான அல்லது செயற்கையான நிகழ்வுகளினால் உருவாக்கப்பட்டிருக்கின்ற குழிகள் அல்லது பள்ளங்களை பருவமழைக்கு முன்பதாக மூடுகின்ற அதேசமயம் ஆபத்தான இடங்களை அடையாளப்படுத்தி அது எல்லோரின் பார்வைக்கும் உட்படக்கூடிய வகையில் தெளிவான குறியீடுகளை வைப்பது கடும் மழை காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்க வல்லது.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஒக்ரோபர் மாதத்தின் ஆரம்ப பகுதியிலிருந்து அல்லது நடுப்பகுதியில் இருந்து நிலத்தை பண்படுத்துகின்ற அதே சமயத்தில் உரியகாலப் பகுதிகளில் விதைப்பை மேற்கொள்ளுவதன் மூலம் இயலுமான அளவில், நீர்ப்பாசனத்தை நம்பி இருக்காது மானாவாரியாக கிடைக்கின்ற மழையிலேயே விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அத்தோடு இவ்வாண்டு சராசரிக்கு அண்மித்ததாகவே மழை கிடைக்கும் என்பதனால் நீண்டகாலத்தில் விளைச்சல் தரக்கூடிய நெல்லினங்களை தவிர்த்து மூன்று அல்லது மூன்றரை மாதங்களில் பயன் தரக்கூடிய விதையினங்களை பயன்படுத்துவது சிறப்பானதாகும்.

அண்மித்த காலப்பகுதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடி மின்னல் நிகழ்வுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே மக்கள் மழையோடு கூடிய இடி மின்னல் நிகழ்வு தொடர்பிலும் அவதானமாக இருப்பது அவசியமாகும். குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் மழை கிடைக்கும்போது நிலத்தைப் பண்படுத்தும் விவசாயிகள் அவதானமாக இருப்பது அவசியம். இடி மின்னலுடன் மழை கிடைக்கும் போது எக்காரணம் கொண்டும் மரங்களின் கீழ் நிற்பதை தவிர்க்க வேண்டும். இது ஒரு நீண்டகால வானிலை முன்னறிவித்தல் என்பதனால் மாற்றங்கள் நிகழ்வதற்கான வாய்ப்புகள் உண்டு - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# அறநெறி மாணவர்கள் நாளை ஆன்மீக சுற்றுலா!

யாழ்ப்பாணம், செப். 14

பொன்னாலை வரதராஜப் பெருமாள் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆன்மீக சுற்றுலா செல்கின்றனர்.

நாளை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஆன்மீக சுற்றுலாவில் கீரிமலை சிவன் கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், செல்வச்சந்நிதி முருகன் கோவில், வல்லிபுரம் ஆழ்வார் ஆலயம், நல்லூர் முருகன் ஆலயம் ஆகியவற்றை தரிசிக்கவுள்ளனர்.

மாணவர்களின் ஆன்மீக ஈடேற்றத்துக்காக இந்த ஆன்மீக சுற்றுலாவை பொன்னாலை வரதராஜப் பெருமாள் அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர் எஸ்.கே. தளையரட்ணம் மேற்கொண்டுள்ளார். (ஐ)

# வல்லிபுர ஆலய அன்னதான மடங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் அன்பளிப்பு!

வடமராட்சி, செப். 14

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் வருடாந்தப் பெருந்திருவிழாவுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்காக ஆலய சூழலில் உள்ள 3 அன்னதான மடங்களுக்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் இரண்டாவது கட்டமாக பொருட்களை அன்பளிப்பு செய்துள்ளது.

வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலிலுள்ள பெரியாழ்வார் அன்னதான மடம், ஆதிமூல லஷ்சுமி ஈசான அன்னதான மடம், பரந்தாமன் ஆச்சிரமம் என்பவற்றுக்கே இந்தப் பொருட்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

1,500 கிலோ அரிசி, 225 கிலோ பருப்பு, 150 கிலோ சீனி, 60 லீற்றர் மரக்கறி எண்ணெய், 75 கிலோ உள்ளி, 15 கிலோ அப்பளம், 50 கிலோ சோயாமீற், 250 தேங்காய்கள் மற்றும் மரக்கறிகள் என்பன நேற்றுமுன்தினம் குறித்த மடங்களுக்கு ஆச்சிரமத்தால் அன்பளிப்பு செய்யப்பட்டன.



மூன்றாம் கட்டமாகவும் ஒரு தொகுதி அன்னதான பொருட்கள் அன்பளிப்பு செய்யப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ——— 14.09.2024 சனிக்கிழமை ——— ஈழநாடு

குரோதி வருடம், ஆவணி 29

"எசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## அநுரவுக்கு மட்டுமல்ல...!

தேசிய மக்கள் சக்தி (ஜே. வி. பி.) ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்கவுக்கு வடக்குக்கு சென்று வாக்குக் கேட்கும் தகுதி இல்லையென்று சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்திருக்கின்றது. இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் தாங்களுக்கு அந்தத் தகுதி இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி கருதுகின்றதா?

அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியில் மும்முனைப் போட்டி தீவிரமடைந்திருக்கின்றது. கணிப்புகளில் அநுரகுமார திஸநாயக்க முன்னணி வகிக்கக்கூடிய வேட்பாளராகவே நோக்கப்படுகின்றார். இந்த நிலையில், ஏனைய வேட்பாளர்களின் கவனம் முழுவதும் அநுரவின் பக்கமாகவே சென்றிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் அநுரவுக்கு வடக்கு மக்களிடம் வாக்குக் கேட்கும் தகுதி இல்லையென்று சஜித் தரப்பு கூறுகின்றது. அநுரவுக்கு மட்டுமல்ல - மாறாக எந்தவொரு பிரதான வேட்பாளர்களுக்கும் வடக்கு மக்களின் வாக்குகளைக் கோரும் தகுதி இல்லை. அப்படியிருப்பதாக அவர்கள் கருதிக்கொள்வதற்கு பிரதான காரணம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பலவீனமான அரசியல் செயல்பாடுகள்தான்.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான மூன்று ஜனாதிபதித் தேர்தல்களின்போதும் தமிழ் மக்கள் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கே வாக்களித்திருந்தனர். அவ்வாறு வாக்களிக்குமாறுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூறியது. அன்றைய சூழலில் ராஜபக்ஷக்களை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காகவே தமிழ் மக்களின் வாக்குகள் பயன்படுத்தப்பட்டன. இதன்போது, மைத்திரிபால சிறிசேன மட்டுமே, தமிழ் மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்றிருந்தார். ஆனால், அவரும் தமிழ் மக்களை ஏமாற்றினார்.

இந்தப் பின்புலத்தில் இப்போது சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்குமாறு தமிழ் அரசுக் கட்சியினர் - முக்கியமாக சுமந்திரன் குழுவினர் கூறுகின்றனர். ஏன் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டால், இப்போது இனவாதம் தெற்கில் தலைதூக்கவில்லை. எனவேதான், இருப்பவர்களில் ஒருவரை ஆதரிக்கும் முடிவை தமிழ் அரசுக் கட்சி எடுத்திருக்கின்றது என்கின்றார். முன்னர் ரணிலுக்கு நற்சான்றிதழ் கொடுத்தது போன்று - இப்போது சஜித் பிரேமதாஸவுக்கு நற்சான்றிதழ் வழங்குகின்றார். ஆயிரத்து நூறு விகாரைகள் சஜித்தின் திட்டமில்லையாம் - அது ஒரு போலியான தேர்தல் விஞ்ஞாபனமாம் - அதனை இப்போதுதானாம் தாங்கள் கண்டுபிடித்திருக்கின்றார்களாம். எப்படியெல்லாம் சொந்த மக்களை ஏமாற்ற முற்படுகின்றனர்.

இன்று அதிகாரப் போட்டியில் ஈடுபடுகின்ற எந்தவொரு பிரதான வேட்பாளர்களுமே தமிழ் மக்களின் வாக்குகளை கோரும் தகுதியடையவர்கள் அல்லர். ஏனெனில், எவருமே தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டவர்கள் அல்லர். வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக செயல்பட்டவர்கள் அல்லர். நம்புங்கள் - நம்புவது மட்டும்தான் உங்களின் பணி - இப்படித்தான் ஒவ்வொரு வேட்பாளர்களும் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றிருக்கின்றனர் - பெற்றிருக்கின்றனர் என்பதை விடவும் அபகரித்திருக்கின்றனர் என்று கூறுவதுதான் சரியானது.

இந்தப் பின்புலத்தில் தங்களுக்குள் யார் உத்தமர்கள் என்னும் அடிப்படையில் முட்டிக் கொள்வதில் எவ்வித பொருளுமில்லை. ஏனெனில், எவருக்குமே தமிழ் மக்களின் வாக்குகளைக் கோரும் தகுதி இல்லை.

# நாவலர் கலாசார மண்டபத்தை வாக்கு சாவடியாக மாற்றாதீர்கள்

### சர்வதேச இந்து மத பீடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 14

ஆறுமுக நாவலர் கலாசார மண்டபத்தை வாக்குச் சாவடியாக பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்கவிடம் சர்வதேச இந்து மத பீடம் கோரியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் செயலாளர் இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில்,

சிறீலசிறீ ஆறுமுகநாவலர் பெருமான் என்ற உன்னத புருஷரை சைவத் தமிழ் உலகம் என்றும் நினைவில் கொள்ளும் வகையிலும் அவர் தம் கொள்கைகளை பேணும் நினைவாலயமாக ஆறுமுக நாவலர் கலாசார மண்டபம் உருவாக்கப்பட்டது.

பொதுச் செயல்பாடுகளுக்கும் பொதுச் சேவைகளுக்கும் இந்த மண்டபம் கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்தபோதிலும் அதன் புனிதத் தன்மையை பேணவேண்டும் என்ற விடயம் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

நாவலர் கலாசார மண்டபம் உருவாக்கப்பட்டதற்கான நோக்கம், அங்கு புனிதம் பேண வேண்டிய கட்டாயம், ஆன்மீக ஸ்தலமாக அந்தமண்டபம் போற்றப்படவேண்டிய தன்மை மற்றும் ஆசாரங்கள் பேணப்பட வேண்டியதன் அவசியம் முதலான இன்னோரன்ன காரணங்களால் கடந்த காலத்து நிர்வாகங்களோடு முரண்பட்டு இன்று வழக்கில் இந்தக் கலாசார மண்டபம் உள்ளது.

தற்போது, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அதிக கவனம் எடுத்து இந்த மண்டபத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் நிலையில், தேர்தல் முதலான பொது விடயங்களில் கடமைக்கு அமர்த்தப்படுகின்றவர்களுக்கு இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுவதில் நிச்சயம் அசௌகரியம் ஏற்படும். அது இந்தக் கலாசார மண்டபத்தின் புனிதத்தையும் சட்டதிட்ட நடைமுறைகளையும் விமர்சனத்துக்கு உள்ளாக்கும். எனவே, தயவு செய்து இத்தகைய நிலைமையை கருத்தில் கொண்டு இந்த மண்டபத்தை வாக்குச் சாவடியாகப் பயன்படுத்தும் செயல்பாட்டை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது.

(ஐ)

# கல்வி, சுகாதாரத்துக்கு செலவிடும் நிதியை அரசு உயர்த்த வேண்டும்!

### கருத்துக்கணிப்பில் தகவல்

கொழும்பு, செப். 14

கல்வி, சுகாதாரம் என்பவற்றுக்கு அரசாங்கம் செலவிடும் நிதியை அதிகரிக்க வேண்டும் என இலங்கையர்கள் விரும்புவது கருத்துக் கணிப்பின் மூலம் தெரிய வந்துள்ளது.

சுகாதார கொள்கைகளுக்கான நிறுவனம் மேற்கொண்ட கருத்துக்கணிப்பிலேயே இந்தத் தகவல் தெரிய வந்தது.

2022 செப்ரெம்பர் முதல் நிதி நெருக்கடியால் அரசாங்கம் வரவு - செலவு திட்டத்தில் வேறு விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கும் நிலைக்கு தள்ளப்பட்டது.

இது தொடர்பில் பொது மக்களிடம் சுகாதார கொள்கைகளுக்கான நிறுவனம் கருத்துக் கணிப்பை நடத்தியது.

இதில், சுகாதாரம், கல்விக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று மக்கள் கூறியுள்ளனர். நாட்டின் அனைத்து சமூகங்கள், அனைத்து பகுதிகளையும் சேர்ந்தவர்களின் கருத்தாக இது உள்ளது. இதற்கு அடுத்து, விவசாயத் துறைக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று 33 வீதத்தினர் தெரிவித்துள்ளனர்.

இளவயதினர் கல்விக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்றும் முதியவர்கள் சுகாதாரத்துக்கு அதிக நிதி வேண்டும் எனவும் விரும்புகின்றனர். (ஐ)

# துண்டுப்பிரசுரங்கள் பொலிஸாரால் பறிமுதல்!

கிளிநொச்சி, செப். 04

ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்கக் கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வழங்கிய துண்டுப் பிரசுரங்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

நேற்றைய தினம் கிளிநொச்சி பொதுச்சந்தைப் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இந்தத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

அந்தச் சமயம் அங்கு வந்த பொலிஸார் துண்டுப் பிரசுரங்களை வழங்கவேண்டாம் என்றும் இது சட்ட விரோதம் எனவும் கூறினர். அத்துடன், விநியோகிக்க வைத்திருந்த துண்டுப் பிரசுரங்களையும் பறித்துச் சென்றனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 14 சனிக்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 29
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : ஏகாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். அதிர்ஷ்டம் பெருகும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாதீர்கள். வளைந்து கொடுக்க வேண்டும்.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் செய்ய தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வளைந்து கொடுத்து செல்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை பாராட்டுவார்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தில் அமைதி நிலவும். புதுமை படைக்கும்.

**கன்னி**
தடைகளைக் கண்டு தளரமாட்டீர்கள். தாய்வழி உறவினர்களால் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும்.

**துலாம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் அதிரடியான மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பார்.

**விருச்சிகம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நிதானம் தேவைப்படும்.

**மகரம்**
சில வேலைகளை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் பிரச்னைகள் வரக்கூடும்.

**கும்பம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை சந்திக்க நேரிடும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். பொறுப்புகள் தேடி வரும்.

**மீனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்றுநிறைவேறும். உறவினர், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். எ

# தமிழகத்தில் அதிகரிக்கும் பாலியல் குற்றச்செயல்கள்

## தி. மு. கவுக்கு எதிராக அ. தி. மு. க. ஆர்ப்பாட்டம்

சென்னை, செப். 14

தமிழகத்தில் அதிகரித்து வரும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் பாலியல் வன்கொடுமைகளை தடுக்கத் தவறிய, சமூக விரோதச் செயல்களை கட்டுப்படுத்தத் தவறிய தி. மு. க. அரசைக் கண்டித்து, அ. தி. மு. க. மகளிர் அணி மற்றும் இளம் பெண்கள் பாசறை சார்பில் எதிர்வரும் 29ஆம் திகதி சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

தி. மு. க. ஆட்சியில் கொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களும், பாலியல் வன்கொடுமை



யாளர்களும் சுதந்திரமாக, சர்வ சாதாரணமாக குற்றம் புரிவது வாடிக்கையாக இருக்கிறது. 6 வயதுச் சிறுமி முதல் 60 வயதைக் கடந்த பெண்கள் வரை யாருக்குமே பாதுகாப்பில்லாத சூழ்நிலை தி. மு. க. ஆட்சியில் ஏற்பட்டுள்ளது மிகுந்த வேதனையளிக்கிறது.

பொலிஸ் துறையை கையில் வைத்திருக்கும் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், பாலியல் குற்றங்களைத் தடுக்கவும், சட்டப்படி உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் பொலிஸாருக்கு முழு சுதந்திரத்தை இன்றுவரை வழங்கவில்லை.

மேலும், தி. மு. க. அரசின் முதலமைச்சருடைய செயலற்ற தன்மையால் ஒருசில பொலிஸார் மக்களைப் பாதுகாப்பதற்கு பதிலாக, சமூக விரோதிகளுக்கு உடந்தையாக இருப்பதாக வரும் செய்திகள் வெட்கக் கேடானதாகும்.

தி. மு. க. ஆட்சியில் தமிழகம் போதைப் பொருள் கேந்திரமாக மாறியுள்ளது என்று எதிர்க் கட்சித் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (எ)


# திராவிட கட்சிகளுக்குத்தான் விஜய் போட்டியாக இருப்பார்

## பா. ஜ. கவுக்கு பாதிப்பில்லை - ராஜா

மதுரை, செப். 14

நடிகர் விஜய் திராவிடக் கட்சிகளுக்குத்தான் போட்டியாளராக இருப்பார், விஜய் அரசியலுக்கு வருவதால் பா. ஜ. கவுக்கு பாதிப்பில்லை. திராவிடக் கட்சிகளின் வாக்குகளைத் தான் அவர் பிரிப்பார் என்று பா. ஜ. க. ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் எச். ராஜா தெரிவித்தார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது, அமெரிக்கா சென்றுள்ள ராகுல்



காந்தி, இந்தியாவுக்கு எதிரானவர்களை சந்தித்துள்ளார். தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே மத்திய அரசு நிதி வழங்கும். அவ்வாறு ஏற்றுக்கொண்டால், தமிழக அரசுக்கு மத்திய அரசின் கல்வி நிதி உடனடியாக வந்தடையும்.


மது ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்குமாறு பா. ஜ. கவுக்கு திருமாவளவன் அழைப்பு விடுக்கவில்லை. மது அருந்தாத உறுப்பினர்களைக் கொண்ட கட்சி என்பதால், எங்களை அழைக்காமல் இருந்திருக்கலாம்- என்றார். (எ)

# விஜய் கட்சியின் மாநாடு நடைபெறுமா?

சென்னை, செப். 14

விக்கிரவாண்டியில் செப். 23ஆம் திகதி நடத்தப்படும் என்று தகவல் வெளியான நிலையில், நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகம் கட்சி மாநாடு ஒத்திவைக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தெரியவந்துள்ளது.

மாநாடு ஒக்ரோபருக்கு ஒத்திவைக்கப்படவுள்ளதாக ஒரு தரப்பினரும், மழைக்காலம் நெருங்குவதால் 2025 ஜனவரியில் நடத்த விஜய் திட்டமிட்டு வருவதாக ஒரு தரப்பினரும் கூறுகின்றனர். இது தொடர்பில் முக்கிய நிர்வாகிகளிடம் விஜய் தீவிர ஆலோசனை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. (எ)



# சீதாராம் யெச்சூரி மறைவு

சென்னை, செப். 14

முற்போக்கு அரசியலுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி மறைவு குறித்து அரசியல் கட்சித் தலைவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

உடல்நலக்குறைவு காரணமாக சீதாராம் யெச்சூரி காலமானார். அவரது மறைவுக்கு தமிழக ஆளுநர், முதல்வர், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். (எ)

# சட்டவிரோத பணப் பரிமாற்றம் ஜாபர் சாதிக்கின் மனு தள்ளுபடி

சென்னை, செப். 13

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச்சட்ட வழக்கில் தன்னை சிறையில் அடைத்தது சட்டவி [illegible] ஜாபர் சாதிக் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் திரைப்படத் தயாரிப்பாளரும், தி. மு. க. முன்னாள் நிர்வாகியுமான ஜாபர் சாதிக், மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்புப்பிரிவு பொலிஸாரால் கடந்த மார்ச் 9ஆம் திகதி கைது செய்யப்பட்டு திஹார் சிறையில் அடைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குப்பெட்டி செல்லும் வாகனத்தின் பின் வேட்பாளர்களின் பிரதிநிதிகள் செல்லலாம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, செப். 14

**வாக்களிப்பு நிலையத்திலிருந்து வாக்கு எண்ணும் நிலையத்திற்கு வாக்குப்பெட்டிகளை கொண்டு செல்லும் வாகனத்தைப் பின்தொடர்ந்து செல்ல வேட்பாளர்களின் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

இதன்படி, வாக்குப்பதிவு நிலையத்திலிருந்து வாக்கு எண்ணும் நிலையத்திற்கு அருகிலுள்ள கடைசி பொலிஸ் அரண் வரை வாக்குப்பெட்டிகளை ஏற்றிச் செல்லும் வாகனத்தை பின்தொடர்ந்து செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

அவ்வாறு செய்யவேண்டியிருந்தால், சம்பந்தப்பட்ட வாக்களிப்பு நிலையத்தின் பெயர், பின்வரும் வாகனத்தின் எண் மற்றும் வாகனத்தில் உள்ள பிரதிநிதிகளின் பெயர்கள் உள்ளிட்ட விரிவான தகவலை அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரால் வாக்களிப்பு தினத்திலிருந்து மூன்று நாட்களுக்கு முன்னர் மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு வழங்கவேண்டும்.

அதற்காக வழங்கப்படும் வாகன உரிமத்தை சம்பந்தப்பட்ட வாக்களிப்பு நிலையத்தில் உள்ள சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய அலுவலரிடம் பெற்றுக் கொள்ளலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்குப்பதிவு முடிந்து வாக்கு எண்ணும் மையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட வாக்குப்பெட்டி எந்த மாற்றமும் இன்றி வாக்கு எண்ணும் மையத்தில் ஒப்படைக்கப்படுமா என சில அரசியல்வாதிகள் மற்றும் வேட்பாளர்கள் சந்தேகம் தெரிவித்ததையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

(அ)

# சீனி இறக்குமதி மோசடி; மனுவை பரிசீலிக்க முடிவு

கொழும்பு, செப். 14

கடந்த ஆட்சிக்காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட சீனிக்கு விதிக்கப்பட்ட வரி குறைக்கப்பட்டதன் மூலம் அரசாங்கத்திற்கு 1590 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி பரிசீலிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தியால் சமர்ப்பிக்கப்பட்ட மனு எஸ்.துரைராஜா, குமுதினி விக்கிரமசிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் ஆராயப்பட்டது.

இதன்போது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பாக ஆட்சேபனைகள் இருப்பின் நேற்று முதல் எதிர்வரும் 8 வாரங்களுக்குள் அதனைத் தாக்கல் செய்யுமாறும் நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், அன்றைய தினம் முதல் நான்கு வாரங்களுக்குள் திருத்தப்பட்ட பிரதிவாதிகளின் பட்டியலைத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நீதியரசர்கள் குழாம் மேலும் உத்தரவிட்டுள்ளது.

(அ)

# தேர்தல் பிரசாரத்தை ஊக்குவிக்கும் வகையில் விருந்துபசாரம் ஏற்பாடு!

## ரணிலுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, செப். 14

சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் பிரசாரத்தை ஊக்குவிக்கும் வகையில் விருந்துபசாரம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளதாகவும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல் கண்காணிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் வடக்கு ரயில் மார்க்கத்தின் அனுராதபுரம் முதல் மஹவ வரையிலான ரயில் பாதையைத் திருத்தும் பணிகளை உரிய முறையில் பூர்த்தி செய்யாமல் திறப்பதை இடைநிறுத்துமாறு கோரி லொகோமோட்டிவ் இயக்குநர்கள் பொறியியலாளர்கள் சங்கம், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. குறித்த ரயில் மார்க்கத்தின் சமிக்ஞை அமைப்பு சீரமைக்கப்படவில்லை எனவும், அதனால் ரயில் மார்க்கம் பாதுகாப்பற்ற நிலையில், உள்ளதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இவ்வாறான பின்னணியில் வடக்கு ரயில் மார்க்கத்தின் அனுராதபுரம் முதல் மஹவ வரையிலான ரயில் மார்க்கத்தின் திருத்தப் பணிகள் முழுமையடையாத நிலையில், ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு அதனைத் திறக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாக லொகோமோட்டிவ் இயக்குநர்கள் பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

(அ)

# நெல்லியடி தகராறில் காயமடைந்த முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், செப். 14

பொலிஸாரின் அச்சுறுத்தலுக்குள்ளானவர் சில மணி நேரங்களில் காயமடைந்த சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நெல்லியடி பகுதியில் குறித்த சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் மந்திகை ஆதார வைத்தியசாலை ஊழியருமான கந்தப்பு கிரிதரன் என்பவரே காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு தற்போது விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வீட்டு உரிமை தொடர்பாக இரு தரப்பினரிடையே நீண்டகாலமாக ஏற்பட்ட தகராறு தொடர்பாக பொலிஸாரிடம் ஒரு தரப்பால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த வீட்டில் தங்கியிருந்ததாக கூறப்பட்ட பிரதேச சபை உறுப்பினரை அங்கிருந்து வெளியேறுமாறு நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி கண்டிப்பாக தெரிவித்ததுடன், அவரது வீட்டு உடைமைகளை தூக்கி எறிந்தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸாரின் அச்சுறுத்தல் தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு சென்று முறையிட்டுவிட்டு வீட்டுக்கு திரும்பியபோது காயமடைந்ததாக தெரிவித்துள்ளார்.

தனது கையில் இரத்தம் வழிந்ததாகவும், பின்னர் கவனித்தபோது வயிற்றில் பெரிய காயமிருந்ததாகவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

காயமடைந்தவர் நோயாளர் காவு வண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக காயமடைந்தவரின் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# கனடாவிலிருந்து யாழில் காணி வாங்க வந்தவருக்கு ஏமாற்றம்!

யாழ்ப்பாணம், செப். 14

கனடா நாட்டில் இருந்து யாழ்ப்பாணத்தில் காணி வாங்குவதற்காக வந்தவரின் 85 இலட்ச ரூபாய் பணம் காணி தரகரால் அபகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட நபர் ஒருவர் கனடா நாட்டில் வசித்து வருகிறார்.

அவர் யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பகுதியில் காணி ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்காக சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

அவருக்கு குறித்த காணியை கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த காணித் தரகர் ஒருவரே அடையாளம் காட்டி , காணி உரிமையாளருடன் பேச்சுக்களையும் நடத்தியுள்ளார்.

அதனை அடுத்து காணியைக் கொள்வனவு செய்வதற்கு 85 இலட்சம் ரூபாய் பணத்தை ரொக்கமாக தயார் செய்திருந்தார்.

அந்த பணத்தைக் கனடா வாசி தன்னுடன் வைத்திருந்தார்.

அவர் அசந்த நேரம் பார்த்து, காணித் தரகர் 85 இலட்ச ரூபாய் பணத்தினை அபகரித்துக்கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட நபரால் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# 736 பேர் கைது!

கொழும்பு, செப். 14

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போது போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 736 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 728 ஆண்களும் 08 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 09 பேர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 06 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(அ)

# இந்தியாவுக்கு தப்ப விமானத்துக்குள் அத்துமீறி நுழைந்த இளைஞன் கைது!

கொழும்பு, செப். 14

கட்டுநாயக்க விமான நிலையத்தின் காத்திருப்பு பகுதியில் இருந்த விமானமொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து இந்தியாவுக்கு தப்பிச்செல்ல முயன்ற இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் நேற்று முன் தினம் வியாழக்கிழமை அதிகாலை 03.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்று, விமான நிலையத்தின் காத்திருப்பு பகுதியில் இந்தியாவின் சென்னை நகரத்தை நோக்கிப் பயணிக்கவிருந்த விமானமொன்றுக்குள் அத்துமீறி நுழைந்துள்ளார்.

இதனையடுத்து, விமான நிலைய அதிகாரிகள் அனைவரும் இணைந்து சந்தேக நபரை கைது செய்து கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபர் இரு தடவைகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ள நிலையில் இவர் இறுதியாக இந்தியாவின் சென்னை நகரத்திற்கு சென்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

(அ)

# பிள்ளையை பாடசாலைக்கு அழைத்துச் சென்ற மனைவியை அடித்துக் கொலை செய்த கணவன்

கொழும்பு, செப். 14

தனது பிள்ளையை பாடசாலைக்கு அழைத்துச் சென்ற மனைவியை, கணவன் கட்டையால் அடித்துக் கொலை செய்துள்ள சம்பவமொன்று மாத்தறையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மாத்தறை-தெய்யந்தர-அத்தபத்துகந்த சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் தெய்யந்தர, பரபாமுல்ல பகுதியில் வசித்து வந்த, 42 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 11ஆம் திகதி தனது பிள்ளையை பாடசாலையில் முதலாம் தரத்தில் சேர்த்துள்ளதாகவும், நேற்றுக் காலை தனது பிள்ளையை பாடசாலைக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தபோது, வீதியில் பதுங்கியிருந்த கணவன், தடியால் தாக்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்ட மனைவிக்கும் அவரது கணவருக்கும் இடையே ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக, அவர் சில காலமாக தனது தாய் வீட்டில் தங்கியிருந்துள்ளதாக தெரியவருகிறது.

இந்நிலையில், மேற்படி சம்பவத்துக்கு குடும்பத் தகராறே காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.


கொலை செய்த சந்தேக நபர் ஹந்துகல பிரதேசத்தில் வசிக்கும் மீன் வியாபாரி என்பதுடன் சந்தேக நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாவதியான அரசியல் சித்தாந்தங்களை கூறும் முக்கிய ஜனாதிபதி வேட்பாளர்கள்!

**ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டு**



கொழும்பு, செப். 14

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற முக்கியமான வேட்பாளர்கள் இன்னும் காலாவதியான அரசியல் சித்தாங்களையே மேடைகளில் தெரிவித்து வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.**

கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற தேசிய சமூகத் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உங்களின் யோசனைகள் அடங்கிய அறிக்கைகள் குறித்து கவனம் செலுத்தி செயற்படுத்த எதிர்பார்க்கிறேன். 2 வருடத்திற்கு முன்னர் போராட்டத்தினால் நாட்டுக்கு பாரிய சேதம் ஏற்பட்டது. அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பாரிய இழப்புகள் ஏற்பட்டன. நாட்டின் ஸ்தீரத்தன்மை பாதிக்கப்பட்டது. அதற்கு எதிராக பல நடவடிக்கை எடுக்க நேரிட்டது.

சிவில் சமூக சுதந்திரத்தை நான் முறியடித்ததாக கூறினர். ஸ்தீரத்தன்மைக்கும் அரசியலமைப்பு அடிப்படைகளுக்கும் இடையில் சமநிலையைப் பேண நடவடிக்கை எடுத்தேன். நாட்டில் இன்று சுதந்திரமும் இருக்கிறது. தேர்தலும் நடக்கிறது. அவற்றை முன்னெடுக்காதிருந்தால் நாமும் பங்களாதேஷைப் போன்று ஆகியிருப்போம்.

இந்த சுதந்திர அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கமும் சட்டம் ஒழுங்கும் ஸ்திரத்தன்மையும் இருக்க வேண்டும். அதனை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். மக்கள் சபையின் ஊடாக கிராமங்கள் இணைக்கப்படும். பிரதேச சபைகளில் இருந்து அரசியல் வாதிகள் இணைக்கப்படுவர்.

சகலரதும் யோசனைகள் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களில் ஆராயப்படும். சிவில் சமூகமும் அரசியல்வாதிகளும் இங்கு கைகோர்க்கின்றனர். இவை அனைத்தையும் இணைத்து சமூகத்தில் மாற்றத்தை கொண்டு வர இருக்கிறோம்.

இதில் கிராமத்திலும், நகரத்திலும் உள்ள மக்களுக்கே முக்கிய பங்கு உள்ளது. கிராம மட்டத்தில் சிவில் செயற்பாட்டாளரகள் உருவாக வேண்டும். எதிர்காலம் பற்றி சிந்தித்தே செயற்பட வேண்டும். கடந்த கால அரசியலில் தொங்கிக் கொண்டிருக்க முடியாது.

இல்லாத பொருளை ஏலத்தில் விற்க முடியாது. சிறந்த சமூக முறையொன்றை உருவாக்க நீங்கள் அளித்து வரும் ஒத்துழைப்பிற்கு நன்றி தெரிவிக்கிறேன். கடந்த கால அரசியலில் சித்தாங்களில் தொடர்ந்தும் தொங்கிக் கொண்டிருக்க முடியாது-என்றார். (அ)

# பாராளுமன்றத்தை சுத்தமாக்கவேண்டும்

**அநுரகுமார கோரிக்கை**

கொழும்பு, செப். 14

நாட்டு மக்களிடம் பாராளுமன்றத்தை சுத்தப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை இருப்பதாக தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் ஜனாதிபதியை மாத்திரம் மாற்ற வேண்டும் என்று நினைக்கவில்லை.

நாட்டில் பெரும் ஊழல்வாதிகளும், மோசடிக்காரர்களும் பாராளுமன்றில் இருக்கிறார்கள்.

சிறைக்கைதிகளை துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தியவர்களும் பாராளுமன்றில் இருக்கிறார்கள்.

பாராளுமன்றத்துக்குக் கத்தியையும், மிளகாய்த் தூளையும் கொண்டு சென்றவர்களும் பாராளுமன்றில் இருக்கிறார்கள்.

அவ்வாறானவர்களை வெளியேற்றி பாராளுமன்றத்தை சுத்தப்படுத்த வேண்டும் என்று மக்கள் கோருகிறார்கள்-என்றார். (அ)

# வடக்கு, கிழக்கு, மலையகத்தில் சஜித்தின் வெற்றி உறுதியானது

**சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்**

கொழும்பு, செப். 14

தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் ஆகிய பகுதிகளில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றி உறுதியாகியுள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்கு பலம் குறைந்து விட்டது என்பதை எண்ணி, சிலர் தனிப்பட்ட அரசியல் குரோதங்களுக்காகத் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு வாக்களிப்பதாக இருந்தால் அதைப்பற்றி சற்று சிந்திக்குமாறு முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் கோரியுள்ளார். (அ)

# அநாவசியமான பிரச்னைகளை முன்கொண்டு செல்ல தயாரில்லை

**நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்**



கொழும்பு, செப். 14

உண்மையான பிரச்னைகளை விடுத்து அநாவசியமான பிரச்னைகளை முன்கொண்டு செல்வதற்குத் தயாரில்லை என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிலர் உண்மையான பிரச்னைகளை விடுத்து தேவையற்ற பல வாக்குறுதிகளை வழங்குகின்றனர்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமும், இனவாதமும் இரண்டு பகுதிகளாகும். இதனைத் தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றிணைக்க எதிர்பார்க்கின்றனர்.

13ஆவது சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இருந்தால் அவர் இனவாதி என்றும், 13ஆவது திருத்தச் சட்டத்தின் காவல்துறை மற்றும் காணி அதிகாரங்கள் தருவார்களாயின் இனவாதி அல்ல என்றும் கருதுகின்றனர். இது பிழையான நிலைப்பாடாகும். இவ்வாறு கூறுபவர்கள் சில சந்தர்ப்பங்களில் இனவாதிகளாக இருக்கலாம். 1983 ஆண்டில் நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தியவர்கள் தொடர்பில் அனைவருக்கும் தெரியும்.

அவர்களும் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் வாக்குறுதிகளை வழங்குகின்றனர். ஆகையால் மக்களுக்கு தேவையான பிரச்சினைகளையே முன்கொண்டு செல்ல வேண்டும் எனவும் மாறாக அநாவசியமான பிரச்னைகளுக்கு முன்னுரிமையளிக்கப்படாது-என்றார். (அ)

# நாட்டில் இரத்தக் களரியொன்றை ஏற்படுத்த ஜே.வி.பியினர் முயற்சி!

**தயாசிறி குற்றச்சாட்டு**



கொழும்பு, செப். 14

நாட்டில் இரத்தக் களரியொன்றை ஏற்படுத்துவதற்குத் தேசிய மக்கள் சக்தி முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கட்டுக்குருந்தவில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த சில தினங்களில் ஜே.வி.பியுடன் தொடர்புடைய மாணவ குழுவினர் பல்கலைக்கழகமொன்றில் முன்னிலை சோஷலிச கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் மாணவர் சங்கத்தினர் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். மாணவர்களின் விடுதிகளுக்குள் நுழைந்தும் அவர்கள் தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளனர். இதன் காரணமாக தற்போது குறித்த பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மோதல் நிலைமை ஏனைய பல்கலைக்கழகங்களுக்கும் நீண்டு செல்லும்.

ஜே.வி.பியுடன் தொடர்புடைய மாணவ சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கத்தினர், தங்களது கட்சிக்கு வாக்களிக்குமாறு மக்களை அச்சுறுத்தி, நாட்டில் பாரிய வன்முறையொன்றை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலை தொடருமாயின் இதுவே இறுதித் தேர்தலாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

ஏனென்றால், தேசிய மக்கள் மக்கள் சக்தியின் கைகளுக்கு அதிகாரம் செல்லுமாயின் நாட்டில் மற்றுமொரு தேர்தல் நடத்துவதற்கு ஒருபோதும் வாய்ப்பு ஏற்படாது.

அவர்கள் ஆட்சிக்கு வந்ததும், பாராளுமன்றத்தைக் கலைப்பதாகக் கூறுகின்றனர்.

பாராளுமன்றத் தேர்தலொன்றை நடத்துவதற்கு 52 நாட்கள் தேவைப்படும்.

3 பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு, தேசிய மக்கள் சக்தியினால் எவ்வாறு அமைச்சரவையொன்றை, அமைக்க முடியும்.

அவர்கள் தற்போது மக்களை அச்சுறுத்தி வாக்கு கேட்டும், ஒரு போக்கினை கையில் எடுத்துள்ளனர்-என்றார். (அ)

# அரச நிறுவனங்களிலுள்ள ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்வேன்!

**சஜித் பிரேமதாஸ அறிவிப்பு**



கொழும்பு, செப். 14

அரச நிறுவனங்களில் தொழில் புரிகின்ற ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்வது தனது கொள்கை திட்டத்தில் ஒன்று என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கங்களின் தேசிய மாநாட்டில் வைத்து அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைத்து அரச நிறுவனங்களின் இருப்பு குறித்தும் கவனிக்கப்படவேண்டியுள்ளது.

இந்த நிறுவனங்களை முன்னெடுத்துச் செல்வது குறித்தும் கவனிக்கவேண்டும்.

அத்தோடு இந்த நிறுவனங்களுடைய பாதுகாப்புத் தன்மையும் உறுதிப்படுத்தப்படும்.

அந்த நிறுவனங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு அது வலுப்படுத்தப்படுகின்ற போது, அந்த நிறுவனங்களில் சேவை செய்கின்ற ஊழியர்களின் உரிமையும் பாதுகாக்கப்படுகின்றது.

எனவே அரச நிறுவனங்களில் தொழில் புரிகின்ற ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்வது தனது கொள்கை திட்டத்தில் ஒன்று என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலாபமடைகின்ற நிறுவனங்களை மேலும் அதிக அளவில் இலாபமடையக்கூடிய நிறுவனங்களாக முகாமைத்துவப்ப டுத்துவதோடு, நட்டத்தில் இயங்குகின்ற நிறுவனங்களை இலாபமடையக்கூடிய நிறுவனங்களாக மாற்ற வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேமதாஸ உயிருடனிருந்தால் ரணிலையே ஆதரித்திருப்பார்!

## தலதா அத்துக்கோரள தெரிவிப்பு

கொழும்பு, செப். 14

**முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ உயிருடன் இருந்திருந்தால் அவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க வையே ஆதரித்திருப்பார் என்று முன்னாள் அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

சஜித்துக்கு ஆதரவளித்து அமைச்சுப் பதவி வாங்க நான் விரும்பவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே எமக்கு அரசியல் கற்பித்தார். இன்று ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் பலர் அடுத்த பாராளுமன்றத் தேர்தலை வெற்றி கொள்ள முடியுமா என்ற சந்தேகத்துடன் இருக்கிறார்கள். நாம் எந்த கட்சியில் இருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே எமது தலைவராவார்.

ரணசிங்க பிரேமதாச இப்போது உயிருடன் இருந்திருந்தார் என்றால் அவரும் ரணில் விக்கிரமசிங்கவிற்கே ஆதரவளித்திருப்பார். அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்ட வேளையிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அவரைப் பாதுகாத்தார். எனவே பிரேமதாஸவின் குடும்பத்தார் நன்றி மறந்தாலும் அவர் உயிரோடு இருந்திருந்தால் நன்றிக்கடன் செலுத்தியிருப்பார்.

எனவே நெருக்கடியால் கஷ்டப்பட்ட மக்களும் அந்த கஷ்டங்களுக்கு முடிவு கட்டிய தலைவரை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டும்-என்றார். (அ)

# அதிகாரம் இல்லாதபோதும் மக்களுக்காக சேவையாற்றியவர் சஜித் பிரேமதாஸவே!

## கூறுகிறார் டலஸ் அழகப்பெரும

கொழும்பு, செப். 14

"நாடு தொடர்பாகவும் தங்களின் எதிர்காலம் தொடர்பாகவும் சிந்தித்து மக்கள் வாக்களிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது" என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாஸ மாத்திரம் தான் அதிகாரம் இல்லாத போதிலும் மக்களுக்காக சேவையாற்றினார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்ற ஒற்றுமை விளையாட்டு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இன்று இந்த நாட்டில் ஆட்சியாளர்கள் அனைவரும் தாங்கள் ஆட்சிக்கு வந்ததன் பின்னரே வேலைத்திட்டங்களை மேற்கொண்டார்கள். அபிவிருத்தி தொடர்பாக பேசினார்கள். ஆனால் சஜித் பிரேமதாஸ மாத்திரம் தான் அதிகாரம் இல்லாத போதிலும் மக்களுக்காக சேவையாற்றினார்.

குறிப்பாக கல்வித்துறை, சுகாதாரத்துறைக்காக அவர் சேவையாற்றினார். எனவே சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஆட்சியில் இந்த நாட்டில் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படும். சமூகத்தில் ஒற்றுமையைப் பலப்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்கு தடையாக காணப்படும் அனைத்து விடயங்களையும் தகர்த்தெறிவோம் -என்றார். (அ)

# வடக்கு சென்று வாக்கு கேட்கும் உரிமை அநுரவுக்கு கிடையாது!

கொழும்பு, செப். 14

இலங்கை, இந்திய ஒப்பந்தம் மற்றும் மாகாணசபை முறைமைக்கு எதிராக அன்று போர்க் கொடி தூக்கிய ஜே.வி.பியினருக்கு வடக்குக்கு சென்று வாக்கு கேட்பதற்குரிய உரிமை கிடையாது. ஆனால் எமக்கு அதற்குரிய உரிமை உள்ளது. ஏனெனில் அனைத்து இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு பயணிக்கும் கட்சிதான் எமது கட்சியாகும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதற்கு எதிராக மக்களை கொன்ற கட்சிதான் ஜே.வி.பி., மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டவர்களையும் கொன்றது. இந்திய மருந்துகளை கொண்டுவந்த அதிகாரிகளையும் அக்கட்சி கொலை செய்தது. இந்திய பொருட்களை புறக்கணிக்குமாறு அழைப்பு விடுத்தது. எனவே, அந்த கட்சியினருக்கு வடக்குக்கு சென்றுவாக்கு கேட்கும் உரிமை கிடைக்காது.

வடக்கு மக்கள் எதிர்பார்க்கும் அதிகாரப்பகிர்வு மற்றும் அபிவிருத்திகளை செய்யக்கூடிய தலைவர் சஜித் பிரேமதாஸ தான் என்பதை அப்பகுதி மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

வடக்கில் உள்ள தமிழ்த் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனை அவர்கள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளனர். அதேபோல வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களும் சஜித்துக்கு பேராதரவு வழங்கும் நிலைப்பாட்டில் உள்ளனர். குறித்த பகுதிகளுக்கு சென்றபோது சஜித்துக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது-என் றார். (அ)

# நாட்டின் ஒருமைப்பாட்டினை நாமல் மட்டுமே பாதுகாப்பார்

## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, செப். 14

நாட்டை பிளவுப்படுத்தாமல், பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கி ஏனைய மதங்களின் உரிமைகளை பாதுகாப்பதாக வெளிப்படையாக குறிப்பிடும் தற்துணிவு எமது ஜனாதிபதி வேட்பாளருக்கே உண்டு. நாட்டின் ஒருமைப்பாட்டை நாமல் ராஜபக்ஷவால் மாத்திரமே பாதுகாக்க முடியும். தாய் நாட்டின் மீது பற்றுக் கொண்டுள்ள முற்போக்கான மக்கள் நாட்டின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு தீர்மானம் எடுக்க வேண்டும். அரசியலுக்காக கொள்கைகளை காட்டிக் கொடுக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பெலியத்தை நகரில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சக்தியாகவே பொதுஜன பெரமுன இன்று எழுச்சிப் பெற்றுள்ளது. வைராக்கிய அரசியல் இல்லாத நாட்டை முன்னேற்றும் பொறுப்பு எமக்கு மாத்திரமே உள்ளது. சிறந்த தரப்பினர் எம்முடன் உள்ளார்கள். விலகிச் சென்றவர்கள் மீண்டும் எம்முடன் ஒன்றிணைவார்கள்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தீர்மானம் மிக்கது. 30 வருட கால யுத்தத்தால் நாடு பின்னோக்கிச் சென்றது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்தோம். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தினோம். நாடு முன்னேற்றமடையும் போது 2015 ஆம் ஆண்டு அரசியல் சூழ்ச்சியினால் தோற்கடிக்கப் பட்டோம்.இந்த அரசியல் சூழ்ச்சி இன்றும் முடிவடையவில்லை. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினர பல்வேறு வழிகளில் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

நல்லாட்சி அரசாங்கம் எமது அரசாங்கம் பெற்ற கடன்களை நான்கு மடங்கு கடன்களை பெற்றது. பெற்றுக் கொண்ட கடன்கள் செலுத்தப்படவில்லை. அபிவிருத்தி பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை.தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப் பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தில் முக்கிய பதவி வகித்தவர்கள் இன்று அதிகாரத்தை கோருகிறார்கள். இவர்களுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். 2019 ஆம் ஆண்டு திருடர்களை பிடிப்பதாக குறிப்பிட்டார்கள். 2024 ஆம் ஆண்டு திருடர்களை பிடிப்பதாக குறிப்பிடுகிறார்கள்.இதுவே உண்மை.

2022 ஆம் ஆண்டு அரகலய என்பதொன்று தோற்றம் பெற்றது. மக்களின் அடிப்படை பிரச்னைகளை குறிப்பிட்டுக் கொண்டு சூழ்ச்சிக்காரர்கள் முன்னின்று செயற்பட்டார்கள். நாங்கள் அன்று பின்வாங்காமல் இருந்திருந்தால் இந்த நாடும் பங்களாதேஸ் போல் மாற்றமடைந்திருக்கும். யுத்தத்துக்கு கட்டளை பிறப்பித்த நாங்கள் சிவில் பிரஜைகள் மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொள்ளுமாறு கட்டளை பிறப்பிக்கவில்லை.

அரகயலவின்போது வெறுப்புக்கள் மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டன. நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு உத்தியோகபூர்வமாக எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தோம்.அனுர, சஜித் சவால்களை பொறுப்பேற்கவில்லை. ஓடி ஒளிந்தார்கள்.

இவ்வாறான பின்னணியின் போது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை பொறுப்பேற்றார். அவருக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கினோம். எமது ஒத்துழைப்புடன் நாட்டுக்கு எதிரான விடயங்களை செயற்படுத்த முயற்சிக்கும் போது அதன் பாரதூரத்தை விளங்கி தனித்து வேட்பாளரை களமிறக்கினோம். கொள்கையை காட்டிக் கொடுத்து அரசியல் செய்யமாட்டோம்-ன்றார். (அ)

# அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் சுயலாபத்துக்காகவே செயல்பட்டனர்

## அநுர குமார திஸநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 14

நாட்டைக் காப்பாற்றுவோம் என அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் தமது சுயலாபத்துக்காகவே செயற்பட்டு வந்தனர் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் அதிகாரத்துக்கு வர முயற்சிப்பவர்களுக்கு நாட்டைப் பற்றி எந்த அக்கறையும் கிடையாது. நாம் கடந்த காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். அவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி தம்மை வளப்படுத்திக் கொண்டார்கள். ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டத்தைப் பாருங்கள்.

அவர் என்னிடம் கேள்விகளை முன்வைக்கிறார். நான் பதில் சொல்ல வேண்டும் என எதிர்பார்க்கிறார். இது கவிதை மேடையா? இல்லை.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நான் நேரடி விவாதத்துக்கு தயாராக இருக்கிறேன்.

தேர்தலின்போது முடிவுகள் வெளியிடப்படாமல் ஏதேனும் பிரச்னைகள் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு உண்டு. ஆதலால் அதற்கு இடமளிக்க வேண்டாம் என நான் பொலிஸாரிடம் கேட் டுக்கொள்கிறேன். நாம் ஆட்சிக்கு வந்தால் ஆறுமாதத்தில் வீட்டுக்குச் சென்றுவிடுவோம் என பிரசாரம் செய்கிறார்கள். நிச்சயமாக அது நடக்காது. நாம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான திட்டத்துடனேயே ஆட்சியமைக்க தயாராக இருக்கிறோம்.-என்றார்.

# ரணில்தான் மீண்டும் இங்கு ஜனாதிபதியாக வேண்டும்!

## அங்கஜன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 14

நாட்டில் பல்வேறு வேலை திட்டங்களை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பல்வேறுபட்ட நெருக்கடியில் இருந்த நாட்டினை மீட்டு தற்போது உள்ள நிலைக்கு கொண்டு வந்தவர் ரணில் விக்ரமசிங்க, எனவே அவருக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாத் துறையை மேம்படுத்த கிழக்கில் பறக்கும் கப்பல் சேவை

## சர்வதேச நிறுவனத்துடன் ஒப்பந்தம்



திருகோணமலை, செப். 14

**கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத் துறையை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் பறக்கும் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.**

இதற்காக தெற்காசியாவிலேயே முதன் முறையாக கிழக்கிலங்கையில் பறக்கும் கப்பல் சேவையை ஆரம்பிக்கும் ஒப்பந்தத்தில் சர்வதேச வான்வெளி நிறுவனம் மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் என்பன கைச்சாத்திட்டுள்ளன.

இந்த நிகழ்வு வியாழக்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

இதன் பிரகாரம் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி, மட்டக்களப்பு மாவட்டத்தில் பாசிக்குடா, அம்பாறை மாவட்டத்தில் அருகம்குடா போன்ற சுற்றுலாத் தளங்களின் இயற்கை அழகை இரசிக்கும் வகையிலும் பயணத்தை இலகுபடுத்தும் நோக்கிலும் பறக்கும் கப்பல் சேவை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வின்போது சர்வதேச வான்வெளி நிறுவனத்தின் தலைவர் ஷூகரேவ் செர்ஜி நிகோலாவிச் கருத்து தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் கடந்த ஒன்றரை வருடமாக ஆளுநர் செந்தில் தொண்டமானால் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்வதை அவதானிக்க முடிந்தது.

அவர் இங்கு பறக்கும் கப்பல் சேவையை ஆரம்பிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். அதற்கமைய கடந்த ஒரு மாத காலமாக எமது நிறுவனத்தின் அதிகாரிகள் இங்கு வந்திருந்து ஆய்வுகளை மேற்கொண்டனர். அந்த ஆய்வு அறிக்கையின் படி இந்த வேலைத் திட்டத்துக்கு நல்ல வரவேற்புள்ளது என்பதை அறிந்து அதற்காக முதலீடு செய்ய முன்வந்துள்ளோம் என்று குறிப்பிட்டார். (எ)

# அலி ஸாஹிர் மௌலானாமீது மு. கா. ஒழுக்காற்று விசாரணை

## இயற்கை நியதி அடிப்படையில் தொடரும்

கல்முனை, செப். 14

பாராளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

அலி ஸாஹிர் மௌலானாவை ஏன் கட்சி உறுப்புரிமையில் இருந்து விலக்கக்கூடாது என்ற காரணங்களை வினவி விசாரணை செய்வதற்காக கட்சியால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் முன்னிலையாகி தன்னுடைய விளக்கத்தை தருமாறு அலி ஸாஹிர் மௌலானாவை, தான் கடிதம் மூலம் கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழங்கிய இடைக்கால தடை உத்தரவானது பாராளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானாவுக்கு எதிரான விசாரணை கட்சி யாப்பின் படியும் இயற்கை நியதியின் அடிப்படையிலும் செய்வதற்கு எந்தத் தடையையும் ஏற்படுத்தாது என்ற விடயம் இந்த வழக்கு கடந்த 11ஆம் திகதி நீதிமன்றத்தில் வந்தபோது தெளிவுபடுத்தப்பட்ட பின்னணியிலேயே இந்த விசாரணை நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக அறிவித்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவராகவும் அந்தக் கட்சி மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராகவும் செயல்பட்டு வந்த அலி ஸாஹிர் மௌலானா கட்சியின் தீர்மானத்தை மீறி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதுடன் அமைச்சுப் பதவியையும் பொறுப்பேற்றுள்ளார்.

இந்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து அவர் இடைநிறுத்தப்பட்டதை சவாலுக்குட்படுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். இதனைப் பரிசீலித்த நீதிமன்றம், அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானாவை கட்சியில் இருந்து இடைநிறுத்தியமைக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

*அதிபர் சேவை பரீட்சையில் சித்தி;*

# நியமனம் கிடைக்காத ஆசிரியர்கள் கல்வியமைச்சருடன் சந்தித்து பேச்சு



மட்டக்களப்பு, செப். 14

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவுக்கும் அதிபர் சேவை பரீட்சையில் சித்தியடைந்து இதுவரை நியமனம் கிடைக்காத ஆசிரியர்களுக்குமான சந்திப்பு ஒன்று மட்டக்களப்பு கல்லடியிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது.

இதன்போது, 2018 இல் விண்ணப்பம் கோரப்பட்டு 2019 இல் பரீட்சையில் சித்தியடைந்த தாங்கள் நேர்முகத் தெரிவுக்கு முகம் கொடுத்த போதும் தங்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் நியமனப் பட்டியலில் உள்வாங்கப்படவில்லை என்பது குறித்து கல்வியமைச்சரிடம் ஆசிரியர்கள் தெளிவுபடுத்தி தமக்கான நீதி கிடைக்க வழிவகை செய்யுமாறு கூறினர்.

இந்தச் சந்திப்பில் செயல் திட்ட அபிவிருத்தி அமைச்சர் அலி ஷாஹிர் மௌலானா, முன்னாள் ஆளுநர் நஷீர் அஹமட் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ)

# புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு இறைஆசீர்வாதமும் எழுதுகருவி வழங்கலும்

## கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில்





கொக்கட்டிச்சோலை, செப். 14

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இறையாசி மற்றும் எழுதுகருவி வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றது .

ஆலய பிரதம குரு சிவசிறி மு. கு. சச்சிதானந்த குருக்கள் முன்னிலையில் ஆலயத் தலைவர் இ. மேகராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மண்முனை தென்மேற்கு கோட்டக் கல்வி காரியாலயம், இந்து இளைஞர் சேவை மன்ற பிரதேச சம்மேளனம் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் மாணவர்களுக்கான பென், பென்சில் போன்ற எழுதுகருவிகள் வழங்கப்பட்டன.

இக் கருவிகள் ஆலயத்தில் பூஜையில் வைக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

பட்டிப்பளையிலுள்ள 19 பாடசாலைகளைச் சேர்ந்த 409 மாணவர்களுக்கு இந்த எழுது கருவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மேற்கு வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி உமாபதி விவேகானந்தம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் மூ. உதயகுமாரன், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ. தயாசீலன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா, காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கி. ஜெயசிறில், முன்னாள் அதிபர் சிவ. அகிலேஸ்வரன், கல்வி அதிகாரிகள்,

ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# “50 இலட்சம் வாக்குகளுக்கு மேல் ஜனாதிபதி ரணில் பெறுவார்”

சாய்ந்தமருது, செப். 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நாட்டை காப்பாற்ற முன்வந்த ஒரே தலைவர். நாட்டு மக்கள் வாழத் தகுந்த வகையில் நாட்டின் நிலைமையை மாற்றியமைத்தவர். அதன் பயனாக இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 50 இலட்சம் வாக்குகளுக்கு மேற்பட்ட வாக்குகளை பெற்றுக் கொள்வார் என்ற நம்பிக்கை உள்ளது என்று முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் நடந்த இயலும் சிறீ லங்கா பிரசார கூட்டத்தில் உரையாற்றிய அசாத் சாலி, முழு நாடும் அநுரவுக்கு என்று சிலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மறு முனையில் சஜித் இப்போதே ஜனாதிபதியாகி விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார். இவர்கள் வேடிக்கை பாத்திரங்கள். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதிர்ச்சியானவர். இலங்கை வரலாற்றில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெறப்போகும் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவே இருப்பார்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாகியின் கோரத்தாண்டவத்தால் 250 பேர் பலி, 800 பேர் படுகாயம்

## உருக்குலைந்தது வியட்நாம்



ஹானோய், செப். 14


**வியட்நாமில் கோரத்தாண்டவமாடிய யாகி புயலால் இதுவரை 250 பேர் உயிரிழந்தனர். 125இற்கும் மேற்பட்டோரை காணவில்லை. 800இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். அத்தோடு, இலட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

வடக்கு வியட்நாமை யாகி புயல் கடந்த சனிக்கிழமை தாக்கியது. அப்போது கனமழை பெய்ததுடன், மணிக்கு 149 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசியதில் வீடுகளின் கூரைகள், மரங்கள், பாலங்கள் பெயர்ந்து விழுந்தன. பல கட்டடங்கள், தொழிற்சாலைகள் சேதமடைந்தன. புயல் காற்றின் வேகம் மறுநாள் தணிந்தாலும் கனமழை தொடர்ந்ததால் ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டன.

இந்த நிலையில் இந்தப் பேரிடரில் இதுவரை 250 பேர் உயிரிழந்தனர், 128 பேரை காணவில்லை, 800இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்று வியட்நாமின் வி. என். எக்ஸ்பிரஸ் நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. வடக்கு வியட்நாமில் தொடர்ந்து பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். வீதிகள், மின்சாரம் துண்டிப்பு, குடிநீர், உணவுப் பொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளை மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை அதிகாரிகள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் புயல், வெள்ளத்தில் விவசாயிகளும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து அதிகாரிகள் கூறும்போது, "சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேயர் பயிர்கள் சேதமடைந்துள்ளன. 15 இலட்சம் கோழிகள் மற்றும் வாத்துகள் இறந்தன. மேலும் 2,500 பன்றிகள், எருமைகள் மற்றும் பசுக்கள் உயிரிழந்தன" என்று தெரிவித்தனர். கடந்த 30 ஆண்டுகளில் வடக்கு வியட்நாமை தாக்கிய மிகமோசமான புயலாக யாகி கருதப்படுகிறது.

(எ)



# விண்வெளியில் நடந்தார் அமெரிக்க கோடீஸ்வரர்


வாஷிங்டன், செப். 14

வரலாற்றில் முதல் ஆளாக கோடீஸ்வரர் ஜாரெட் ஐசக்மேன் விண்வெளியில் தனது நடைபயணத்தை மேற்கொண்டார்.

ஆய்வுப் பணிகளுக்காக விண்வெளிக்கு செல்லும் விண்வெளி வீரர்கள் சில சமயங்களில் தங்களின் விண்கலத்தை விட்டு வெளியே வந்து ஆய்வு மேற்கொள்ள வேண்டியதுயுள்ளது. இது விண்வெளி நடையபணம் என அழைக்கப்படுகிறது. முறையாக பயிற்சி பெற்ற விண்வெளி வீரர்கள் கவச உடைகளை அணிந்து கொண்டு விண்வெளி நடைபயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்த நிலையில் வணிக ரீதியில் தொழில்முறை விண்வெளி வீரர் அல்லாத தனிநபர்களை விண்வெளியில் நடைபயணம் மேற்கொள்ள வைப்பதற்கான முயற்சியில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் இறங்கியது. இதன்படி அமெரிக்காவை சேர்ந்த பெரும் கோடீஸ்வரரான ஜாரெட் ஐசக்மேன் 15 நிமிடங்கள் விண்வெளியில் நடைபயணம் மேற்கொண்டார். அதன் பின்னர் அவர் விண்கலத்துக்கு திரும்பினார்.

(எ)



# இரட்டை கோபுர தாக்குதல் நினைவுதினம் அனுஷ்டிப்பு

## பைடன், கமலா, ட்ரம்ப் பங்கேற்பு

நியூயோர்க், செப். 14

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இரட்டைக் கோபுரம் மீது நடந்த தீவிரவாதத் தாக்குதலின் 23ஆவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அல் கொய்தா தீவிரவாதிகள் விமானங்களை கடத்தி நியூயோர்க்கில் உள்ள இரட்டை கோபுரம் என்று அழைக்கப்பட்ட உலக வர்த்தக மையத்தின் மீது மோதி வெடிக்கச் செய்தனர். இதில் 3,000 பேர் வரை உயிரிழந்தனர். இந்தக் கொடூரத் தாக்குதலின் 23ஆவது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. நியூயோர்க் நகரில் அமைக்கப்பட்டுள்ள கிரவுண்ட் ஜீரோ (இரட்டை கோபுர தாக்குதல்) நினைவிடத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் உள்ளிட்டோர் அரசியல் வேற்றுமைகளை கடந்து பங்கேற்றனர்.

குறிப்பாக, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியாளர்களான கமலா மற்றும் ட்ரம்ப் ஆகியோர் முதல் தேர்தல் விவாதத்தில் கலந்து கொண்ட சில மணி நேரங்களில் இந்த நிகழ்வில் ஒன்றாக பங்கேற்றது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. இதனிடையே, உலக வர்த்தக மையம் தாக்கப்பட்ட போது விண்வெளியில் இருந்து எடுக்கப்பட்ட படங்களை நாசா தனது வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளது.

(எ)

# ரஷ்யா - உக்ரைன் பிரச்னைக்கு தீர்வு காண இந்தியா முயற்சி

## புடினுடன் அஜித் டோவல் ஆலோசனை

மொஸ்கோ, செப். 14

ரஷ்யா - உக்ரைன் இடையே நீடித்து வரும் பிரச்னைக்கு தீர்வு காண இந்தியா முயற்சித்து வருகிறது. இதன் முதற்கட்டமாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் ஆலோசனை நடத்தியுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி புடின் சமீபத்தில் வழங்கிய நேர்காணலிலும், ரஷ்யா - உக்ரைன் இடையேயான பிரச்னையை தீர்ப்பதில் இந்தியா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகள் முக்கிய பங்காற்ற முடியும் என நம்புகிறோம் எனக் கூறினார். இத்தாலிப் பிரதமர் ஜார்ஜியா மெலோனியும், "ரஷ்யா - உக்ரைன் பிரச்னைக்கு இந்தியா மற்றும் சீனா தீர்வு காண முடியும்" என்றார். இதையடுத்து ஜனாதிபதி புடினுடன் பேசிய இந்தியப் பிரதமர் மோடி, அமைதி பேச்சுகள் தொடர்பில் ஆலோசிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலை அனுப்பி வைப்பதாக கூறினார்.



இந்த நிலையில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா (பிரிக்ஸ்) நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டம் செயின்ட் பீற்றர்ஸ்பர்க் நகரில் நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் சென்றிருந்தார். இந்தக் கூட்டத்துக்கு இடையே ரஷ்ய பாதுகாப்பு ஆலோசகர் செர்கே சோய்குவை, அஜித் டோவல் சந்தித்துப் பேசினார். இருதரப்பு பரஸ்பர நலன்கள் குறித்து பேசிய இருவரும், உக்ரைன் பிரச்னைக்கு தீர்வு காண்பது குறித்தும் பேசினர்.

அதன் பின்னர் ரஷ்ய ஜனாதிபதி புடினை, அஜித் டோவல் சந்தித்து உக்ரைன் பிரச்னைக்கு தீர்வு காண்பது குறித்து பேசினார். பிரிக்ஸ் கூட்டத்தில் பங்கேற்க வந்திருந்த சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீயையும், அஜித் டோவல் சந்தித்து பேசினார். அப்போது இந்தியா-சீனா உறவு, இரு நாடுகளுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகுக்கும் முக்கியமானது என்பதை இருவரும் ஒப்புக் கொண்டனர் என்று சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

(எ)

# முதல்வர் கெஜ்ரிவாலுக்கு பிணை

புதுடில்லி, செப். 14

மதுபான கொள்கை ஊழல் தொடர்பில் டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு எதிராக சி. பி. ஐ. தொடர்ந்த வழக்கில் அவருக்கு உச்ச நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளது. இதன்மூலம் 6 மாதங்களுக்குப் பின்னர் அவர் சிறையிலிருந்து வெளியே வந்துள்ளார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலிகமாக மூடப்பட்டது ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலை!

## மாணவக் குழுக்களிடையே மோதல்

கொழும்பு, செப். 14

**இரண்டு மாணவக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலையடுத்து ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் கல்விபயிலும் இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையில் நேற்று மோதல் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் நேற்று மாலை 6 மணிமுதல் பல்கலைக் கழகத்தை தற்காலிகமாக மூட பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது.

குறித்த பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களையும் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து வெளியேறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால், குறித்த பகுதியில் பெரும் பதற்றமான சூழல் நிலவியதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு

கொழும்பு, செப். 14

அநுரகுமார திசாநாயக்க பற்றி சமூக வலைத்தளங்களில் முன்னெடுக்கப்பட்ட போலியான பிரசாரங்கள் குறித்து தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது குறித்து சட்டத்தரணி அகலங்க உக்குவத்த ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்-

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசநாயக்க மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக சமூக வலைத்தளங்களில் போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தனியார் வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டு வைத்தியர் ஒருவரின் அத்தாட்சிக் கடிதம் போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது.

அநுரகுமார திசாநாயக்கவுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் வேண்டுமென்றே திட்டமிட்டு இவ்வாறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆதலால், குற்றவாளிகளைக் கண்டறிந்து உரிய தண்டனை பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தி குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் நான் முறைப்பாடு பதிவு செய்துள்ளோம்-என்றார்.

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, செப். 14

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, இந்த வருடம் அதிகரித்துள்ளதாக, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் கடந்த 8 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள், 13 இலட்சத்து 95 ஆயிரத்து 773 சுற்றுலாப் பயணிகள், நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள், கடந்த பெப்ரவரி மாதத்தில் வருகை தந்துள்ள நிலையில், அவர்களின் மொத்த எண்ணிக்கை, 2 இலட்சத்து 18 ஆயிரத்து 350 ஆகும்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள், இந்தியா, பிரித்தானியா, ரஷ்யா, ஜேர்மனி மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்துள்ளனர். என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

# நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் சுத்திகரித்த குடிதண்ணீர்த் தொகுதி திறப்பு

யாழ்ப்பாணம், செப். 14

நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில், சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் இயந்திர தொகுதி பொருத்தப்பட்டு நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின், 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் பொருத்தப்பட்டு, நேற்று முன் தினம் காலை 10.15 மணியளவில், பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் நாகராஜா இரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக, சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் பங்கேற்று, குடிதண்ணீர் தொகுதியை திறந்து வைத்தார்.

நிகழ்வில், மருத்துவர் செந்தில்குமரன், பாடசாலை பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆச்சிரம தொண்டர்கள் என கலந்துகொண்டனர்.

இதேவேளை, தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால், வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய திருவிழாவை முன்னிட்டு, பெரியாழ்வார் அன்னதான மடம், ஆதிமூல லஷ்சுமி ஈசான அன்னதான மடம், பரந்தாமன் ஆச்சிரமம் என்பனவற்றுக்கு, அன்னதானப் பொருட்களாக, ஆயிரத்து 500 கிலோ அரிசி, 225 கிலோ பருப்பு, 150 கிலோ சீனி, 60 லீற்றர் மரக்கறி எண்ணெய், 75 கிலோ உள்ளி, 15 கிலோ அப்பளம், 50 கிலோ சோயா, 250 தேங்காய் மற்றும் மரக்கறி வகைகள் என்பன கையளிக்கப்பட்டன. (அ)

# யால தேசிய பூங்காவிலிருந்து பட்டாம்பூச்சிகள் கடத்த முற்பட்ட இத்தாலியர்களுக்கு அபராதம்!

கொழும்பு, செப். 14

யால தேசிய பூங்காவில் இருந்து 92 வகை பட்டாம் பூச்சி உட்பட நூற்றுக்கணக்கான பூச்சிகளை கடத்த முற்பட்ட இத்தாலிய பிரஜைகள் இருவருக்கு 60 மில்லியன் இலங்கை ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

68 வயதான தந்தையும், 28 வயதான அவரது மகனுமே இந்த நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த மே மாதம் யால தேசிய பூங்காவை இவர்கள் பார்வையிடச் சென்றபோது பூச்சிகள் கொண்ட போத்தல்களுடன் அவர்களை பூங்கா பாதுகாப்பு ஊழியர்கள் கைது செய்திருந்தனர்.

பின்னர், வழக்கு விசாரணையை எதிர்கொண்ட அவர்கள், பூச்சிகளை சட்டவிரோதமாக சேகரித்தமை, மற்றும் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டுக்காக செப்ரெம்பர் மாத தொடக்கத்தில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

மேலும், மேற்படி அபராதத் தொகையும் அவர்களுக்கு பிறப்பிக்கப்பட்டது.

நாட்டில் வனவிலங்கு குற்றங்களுக்காக இதுவரை இல்லாத அளவுக்கு அதிகமான தொகை அபராதமாக விதிக்கப்பட்ட சந்தர்ப்பம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# வரி வருமானம் 28.5 வீதமாக உயர்வு!

දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

கொழும்பு, செப். 14

இவ்வாண்டின் முதல் எட்டு மாதங்களில் வரி வருமானம் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 28.5% அதிகரித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு ஜனவரி முதல் ஒகஸ்ட் இறுதி வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 12,29,245 மில்லியன் ரூபா வரி வருமானத்தை ஈட்டியுள்ளது.

கடந்த வருடம் இந்த காலப்பகுதியில் 9,56,418 மில்லியன் ரூபாவை மாத்திரம் ஈரக்க முடிந்தது.

கூட்டு நிறுவனம் மற்றும் கூட்டு நிறுவனம் அல்லாதவற்றின் வருமான வரி, பெறுமதி சேர் வரி, சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி, பந்தயம் மற்றும் சூதாட்ட வரி, பங்கு பரிவர்த்தனை வரி மற்றும் பிற வகை வரிகள் போன்றன இந்த வருமான அதிகரிப்புக்கு காரணிகளாக அமைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# விபத்தில் இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 14

காலி, ரத்கம - விஜேரத்ன மாவத்தை ரயில் கடவையில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

காலி - ரத்கம பிரதேசம், விஜேரத்ன மாவத்தை ரயில் கடவையில் இன்று காலை ரயிலுடன், முச்சக்கரவண்டி மோதி விபத்திற்குள்ளானதில், முச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# எல்பிட்டி பிரதேச சபைக்கான தேர்தல் ஒக்ரோபர் 26ஆம் திகதி

கொழும்பு, செப். 14

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி, காலி எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் நடத்தப்படும் என, காலி மாவட்ட தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

எல்பிட்டிய பிரதேச சபைக்கான வேட்பு மனுக்களை கையளிக்கும் காலம், நேற்று முன் தினம் நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடைந்த நிலையில், வேட்புமனு நிராக ரிப்புக்கான காலம், பிற்பகல் 1.30 மணி வரை வழங்கப்பட்டது.

அதற்கமைய, 9 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும், 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களை கையளித்தன.

ஜனசேத பெரமுன, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன ஐக்கிய முன்னணி, பொதுஜன ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய மக்கள் சக்தி, இரண்டாம் தலைமுறை கட்சி என, வேட்பு மனுக்கள் கையளிக்கப்பட்டன. (அ)

# விசேட போக்குவரத்து சேவை நேற்று முதல் நடைமுறைக்கு!

கொழும்பு, செப். 14

நீண்ட வார இறுதி விடுமுறைக்காக சொந்த இடங்களுக்கு செல்வோருக்காக நேற்று முதல் விசேட போக்குவரத்து சேவை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

மேலதிகமாக சுமார் 60 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

நேர அட்டவணையின்றி மேலதிக பஸ் சேவைகளை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கூறியுள்ளது. (அ)

# போலி கடவுச்சீட்டுடன் தாய்லாந்து எல்லையில் கைதான இலங்கையர்!

கொழும்பு, செப். 14

இலங்கையர் ஒருவர் போலி கடவுச் சீட்டினை வைத்திருந்த குற்றச்சாட்டில் மலேசியாவின் புக்கிட் காயூ ஈத்தாமில் பகுதியில் உள்ள மலேசியா-தாய்லாந்து எல்லைச் சோதனைச் சாவடியில் வைத்து குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

21 வயதான அவர், 'ராஜா டேனி டெனிஸ்' என்ற பெயர் கொண்ட கடவுச்சீட்டைப் பயன்படுத்தி தாய்லாந்துக்கு செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

செல்லுபடியாகும் பயண ஆவணம் இன்றி நாட்டுக்குள் நுழைந்து தங்கியிருந்தமைக்காக சந்தேகநபர் குடிவரவு சட்டத்தின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை இந்த போலி கடவுச்சீட்டு பின்னணியில் உள்ள மாபியா குறித்து முழு விசாரணைகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பில்...

சடலம் மீட்கப்பட்ட இடத்துக்கு அண்மையாக மாந்திரீக பூசை வழிபாடு நடைபெற்றமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன. இதனால், சடலமாக மீட்கப்பட்டவர் நரபலி கொடுக்கப்பட்டாரா என்று சந்தேகம் எழுப்பப்பட்டது.

சடலம் சிதைவடைந்த நிலையில் காணப்படுவதால் சடலத்துக்கு உரியவரை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான அடுத்த கட்ட விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அநுர...

தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு - கெஸ்பேவவில் "ரணிலால் முடியும்" வெற்றி பேரணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இதில், கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று மக்களின் ஆதரவைக் கோரியுள்ளார். மக்களும் பெருமளவில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வந்திருக்கின்றார்கள்.

பாராளுமன்றத்தில் அனைத்து பகுதிகளையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளினதும் மக்களினதும் நம்பிக்கையை ஜனாதிபதி உறுதி செய்திருக்கின்றார். இதுவரையில் பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே முன்மொழிந்திருக்கின்றார். நாட்டின் கல்வித்துறைக்கும் கல்வியியல் கல்லூரி போன்ற விடயங்களை அவர் அறிமுகப்படுத்தினார். இவ்வாறு இலங்கையில் புதுமையான முயற்சிக ளை சாத்தியமாக்கிக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே முடியும்.

தவறியேனும், இந்த நாட்டில் மக்கள் விடுதலை முன்னணி ஆட்சிக்கு வந்தால் மூன்று எம். பிக்களை வைத்துக் கொண்டு ஜனநாயக ஆட்சி செய்யும் இயலுமை அநுரகுமார திஸநாயக்கவுக்கு இல்லை. எனவே, அவர் தன்னிச்சையான அதிகாரங்களுடன் செயல்பட முயற்சிப்பார். ஆகவே, நாட்டில் ஆட்சி அதிகாரத்தை செயல்படுத்தக்கூடிய பாராளுமன்ற அதிகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமே உள்ளது. இம்முறை பெருமளவான புதிய வாக்காளர்கள் பதிவாகியிருக்கும் நிலையில் நாட்டின் எதிர்காலத்தை சிந்தித்து வாக்களிக்க வேண்டும்." - என்றார். (ஐ)

## பிரதேச...

பேசக்கூட விரும்பவில்லை. குறைந்தபட்சம் கன்னியா வெந்நீரூற்றை காப்பாற்ற முடிந்ததா? கல்முனை பிரதேச சபையை தரமுயர்த்த முடிந்ததா?

"இதேபோன்றே வடக்கில் கடற்றொழில் அமைச்சராக இருந்தும் இன்று வரை இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த முடிந்ததா? எங்களுடைய மீனவர்களுக்கு என்ன செய்தீர்கள்? கடற்றொழில் அமைச்சராக இருந்து எமது மீனவர்களின் பிரச்னையை தீர்க்க முடியவில்லை.

"ஆனால், இப்போதும் மீண்டும் ரணில் ஜனாதிபதியாக வர வேண்டும் என்று கோருகின்றார்கள். இது அவர்களின் சட்டை பையை நிரப்பும் செயல். பிரதேச வாதத்தை முன்னிறுத்தி கிழக்கில் பிரசாரம் செய்கிறார்கள். அவர்களுக்கு வடக்கு - கிழக்கு இணைப்பை பற்றிக்கூட அக்கறை இல்லை. பறிபோகும் கிழக்கை மீட்க இவர்கள் என்ன செய்தார்கள். தற்போதும் பிரதேசவாதம் பேசி கிழக்கை பறிகொடுக்க முயல்கின்றனர். இதனை கிழக்கு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, இலங்கையில் வாழும் அத்தனை தமிழ் மக்களும் சங்கு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்" - என்றார். (ஐ)

## ரணில்...

வல்லுநர்களின் மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அவர் வருகை தருகிறார்.

மாநாடு நிறைவடைந்த பின்னர் இன்று மாலை குருநகரில் நடைபெறவுள்ள பிரசாரக் கூட்டத்திலும் அவர் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

## யாழ்...

ஆட்சியமைத்தபோதுதான் மாகாண சபை குறித்து சகருக்கும் தெரியவந்தது. அந்தளவுக்கு எமது ஆட்சி சிறப்பாக அமைந்தது.

"மாகாண சபைகளுக்கு தேர்தல் நடக்காமல் போனதுக்கு சுமந்திரன் எம். பி. மட்டும்தான் காரணம். யாழ்ப்பாணத்தில் நடந்த அரசியல் போட்டியாலேயே மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியாமலேயே போனது.

"சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கக் கோருகிறது. சமஷ்டியை ஏற்றுக் கொள்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தயாராக இருக்கிறதா?", என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ஐ)

## சங்குக்கு...

அவரின் தேர்தல் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "8 மாவட்டங்களிலும் எமது பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்பார்த்த வாக்குக்களைவிட அதிக வாக்குகள் எமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை வந்துள்ளது. மக்களிடம் நாம் சங்கு சின்னத்துக்கு மாத்திரம் வாக்களிக்க வேண்டும் என்றே கோரி வருகிறோம். ஆனால், சிலர் சங்கு சின்னத்துக்கு வாக்களித்த பின்னர் விரும்பிய மற்றைய வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு கூறுகின்றனர். இது என்னுடையதோ, பொதுக் கட்டமைப்பை சார்ந்தவர்களுடைய கருத்தோ இல்லை.

தற்போதைய நிலவரப்படி எவருமே 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற முடியாத நிலைமை காணப்படுகிறது. அதனால், தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் வடக்கு - கிழக்கில் முகாமிட்டு பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

நல்லூர் திருவிழாவுக்கு காப்புக்கடை போடுவது போன்று கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இனிப்புக் கடை போடுவது போன்று வடக்கு, கிழக்கில் வந்து தங்கி நின்று பிரசாரம் செய்கின்றனர். அவர்களுக்கு முகவர்களாக சில தமிழர்கள் செயல்படுகின்றனர். எமது இனத்துக்காக அவர்கள் சிந்தித்து சங்கு சின்னத்துக்கு ஆதரவு வழங்க முன்வரவேண்டும் - என்றார். (ஐ)

## யாழ்...

புகையிரதத் திணைக்களத்திடமும் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மாஹோ முதல் அநுராதபுரம் வரையிலான பரீட்சார்த்த ரயில் பயணம் நேற்றுமுன்தினம் திடீரென இரத்து செய்யப்பட்டது. புகையிரத நிலையங்களின் புனரமைப்பு பணிகள் முழுமையடையவில்லை என்று தொழிற்சங்கங்கள் காட்டிய எதிர்ப்பாலேயே இந்தப் பரீட்சார்த்தப் பயணம் நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தற்போது, ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது என்பதால் அரசியல்வாதிகள் குறித்த நிகழ்வுகளில் பங்கேற்க முடியாது என்பதாலேயே ரயில் சேவையை ஆரம்பிப்பதில் சிக்கல் காணப்படுவதாக புகையிரதத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலைமையே யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவையையும் மீண்டும் ஆரம்பிப்பதில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அறியவருகிறது. (ஐ)

# பெண்கள் இராஜாங்க அமைச்சராக சீதா அரம்பேபொல பதவி பிரமாணம்



கொழும்பு, செப். 14

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக சீதா அரம்பேபொல பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட மருத்துவர் சீதா அரம்பேபொல நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

சீதா அரம்பேபொல, சுகாதார இராஜாங்க அமைச்சராக வகிக்கும் பதவிக்கு மேலதிகமாக, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி பணிமனையில் நடந்த இந்தப் பதவிப் பிரமாண நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார். (ஐ)

# புதிய ஜனாதிபதியுடன் இணைந்து செயலாற்ற சீனா தயாராகவுள்ளது!

### சீனத் தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 14

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையில் ஜனாதிபதியாக யார் தெரிவானாலும் அவருடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கிறோம். இலங்கையின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு மதிப்பளிப்பதில் எப்போதும் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம் என்று சீனா கூறியுள்ளது.

மேலும், "எந்த நாட்டின் இறையாண்மையிலும் ஒருபோதும் நாங்கள் தலையிட மாட்டோம். இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் யார் ஆட்சிக்கு வந்தாலும், புதிய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளது" என்று கொழும்பு துறைமுக நகரத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் சீனத் தூதரகத்தின் ஆலோசகர் ஸூ யாங்வே கூறியுள்ளார்.

இந்த சந்திப்பில் கருத்து வெளியிட்ட சீன தூதுவர் கீ சென்ஹொங், "ஒரே சீனா கொள்கையை இலங்கை கடைப்பிடிப்பது எப்போதும் பாராட்டுக்குரியது. இது உண்மையான நட்பின் உணர்வை பிரதிபலிக்கிறது. நட்பு நாடுகளின் இறையாண்மையைப் பாதுகாப்பதில் சீனா உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளது. அதேபோன்று சீனாவின் இறையாண்மையை குறைமதிப்புக்கு உட்படுத்த சில முயற்சிகள் உள்ளன, ஆனால் அத்தகைய நோக்கங்களை நாங்கள் ஒருபோதும் பொறுத்துக்கொள்ள மாட்டோம்." என்றும் கூறினார்.

# கிளப் வசந்த படுகொலை 12 பேருக்கு விளக்கமறியல்

கொழும்பு, செப். 14

கிளப் வசந்த என்று அழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவின் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய 12 சந்தேகநபர்களை எதிர்வரும் 27ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கடுவலை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கடந்த ஜூலை மாதம் 08ஆம் திகதி அத்துருகிரிய பிரதேசத்தில் உள்ள பச்சை குத்தும் நிலையம் ஒன்றின் திறப்பு விழாவின்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கிளப் வசந்த உட்பட இருவர் உயிரிழந்துள்ளதுடன் பிரபல பாடகியான கே. சுஜீவா உட்பட 4 பேர் காயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கஜேந்திரன்...

துண்டுப் பிரசுரங்களை வழங்கினர்.

இவ்வாறு துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பது சட்டத்துக்கு முரணானது என்று கூறி கிளிநொச்சி பொலிஸாரால் கஜேந்திரன் எம். பி. நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டார். எனினும், எச்சரிக்கையின் பின் னர் அவர் நேற்று மாலையே அவர் விடுதலை செய்யப்பட்டார் என்று அறியவருகின்றது. (ஐ)

# முட்டை வியாபாரிக்கு 6 மாத கடூழிய சிறை!

கொழும்பு, செப். 14

அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குருநாகல், மாதவ பிரதேசத்தைச் சேர்ந்த முட்டை வியாபாரி ஒருவருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 06 மாத கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிலெஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தினால் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தேர்தலின் பின்னரே அடுத்த மீளாய்வு நாடு நெருக்கடியிலிருந்து மீளவில்லை

## இலங்கை நிலைமை குறித்து நாணய நிதியம்

கொழும்பு, செப். 14

**தேர்தலின் பின்னரே இலங்கை தொடர்பான நீடிக்கப்பட்ட நிதி வசதியின் மூன்றாவது மீளாய்வு இடம்பெறும் என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கை தொடர்பான நீடிக்கப்பட்ட நிதி வசதியின் மூன்றாவது மீளாய்வு இடம்பெறும் என சர்வதேச நாணய நிதியத்தின் செய்தித் தொடர்பாளர் ஜூலி கோஸாக் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று புதிய அரசாங்கம் அல்லது மக்களின் விருப்பத்தின் அடிப்படையில், தாங்கள் வேலைத்திட்டக் கலந்துரையாடல்களை முன்னெடுப்போம் எனவும், அதற்கு தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மிக மோசமான நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு வருவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு வேலைத்திட்டங்களின் நோக்கங்களை அடைவது ஒரு முக்கிய படியாகும். இலங்கையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் நாடு இன்னும் நெருக்கடியிலிருந்து மீளவில்லை எனவும் ஜூலி கோஸாக் தெரிவித்துள்ளார். கடினமாக வென்ற வெற்றிகளைப் பாதுகாப்பது இலங்கைக்கு முக்கியமானது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## தேர்தல் கண்காணிப்பில் 9 நாடுகளின் பிரதிநிதிகள்

கொழும்பு, செப். 14

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 9 நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் அழைப்புக்கிணங்க அவர்கள் வருகை தந்துள்ளதாக அதன் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் 18ஆம் திகதி முதல் அவர்கள் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

சார்க் வலய நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் ரஷ்ய கண்காணிப்பாளர்களும் இந்த கண்காணிப்பு குழுக்களில் அடங்குகின்றனர்.

அவர்கள் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அறிக்கையொன்றை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கையளிக்கவுள்ளனர்.

இதனிடையே, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்பாளர்கள் ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

## வாக்காளர் அட்டை விநியோகம் இன்று முழுமையாக நிறைவுறும்

கொழும்பு, செப். 14

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்கு விநியோகிக்கும் பணி இன்றுடன் நிறைவு பெறும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை 80 வீத உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க குறிப்பிட்டார்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அருகாமையிலுள்ள தபால் அலுவலகங்களில் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி தமது வாக்காளர் அட்டையை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (அ)

# உத்தியோகபூர்வ பெறுபேறுகளை மாத்திரமே மக்கள் நம்பவேண்டும்

கொழும்பு, செப். 14

ஜனாதிபதித் தேர்தலின் வாக் களிப்புகள் நிறைவடைந்த பின் வெளியாகின்ற உத்தியோகபூர்வ பெறுபேறுகளை மாத்திரமே நம்பு மாறு தேர்தல்கள் ஆணைக்குழு பொதுமக்களைக் கோரியுள்ளது.

அத்துடன் உத்தியோகப்பற்றற்ற முடிவுகளை வெளியிடுவதிலிருந்து விலகி இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணும் நிலையங்க ளில் ஜனாதிபதி வேட்பாளர்களின் பிரதிநிதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கும்.

அவர்கள் வாக்கு எண்ணும் பணிகளை அவதானித்து, அதிகாரிகள் கூறுகின்ற எண்ணிக்கைகளை அதன் பின்னர் ஏற்படுகின்ற சீர்திருத்தங்களைக் கணக்கில் கொள்ளாமல் தெளிவற்ற விவரங்களை வெளியிடக் கூடும்.

இவ்வாறான தெளிவற்ற உத்தி யோகப்பற்றற்ற விவரங்கள், உத்தி யோகபூர்வ பெறுபேறுகளிலிருந்து வித்தியாசமாக இருக்கவும் கூடும்.

எனவே பொதுமக்கள் தேர்தல்கள் ஆணைக் குழுவினால் இறுதியாக உறுதி செய்யப்பட்டு வெளியிடப்படுகின்ற முடிவுகளை மாத்திரமே நம்பவேண்டும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்ரமணியம் அச்சுதன் தெரிவித்தார். (அ)

# வாக்களிப்பு நிலையங்களுக்கு கைபேசி எடுத்துசெல்ல தடை!

கொழும்பு, செப். 14

ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களுக்குக் கைப்பேசிகளை எடுத்துச் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டிருப்பதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் சிவசுப்ரமணியம் அச்சுதன் தெரிவித்தார்.

அஞ்சல் வாக்கைப் பதிவு செய்து அந்த வாக்குச் சீட்டை படமெடுத்து சமூகவலைத்தளங்களில் பதிவு செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்தநிலையில், வாக்களிப்பு நிலையங்களுக்குக் கைப்பேசியை எடுத்துச் செல்ல ஏற்கனவே இருக்கின்ற தடையை இறுக்கமாக கடைப்பிடிக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டத்தின்படி வாக்களிப்பு என்பது இரகசியமாக மேற்கொள்ளப்படவேண்டிய விடயமாகும். எனினும் வாக்குச்சீட்டைப் படம் எடுத்து அதன் இரகசியத்தன்மையை பேணாமை சட்டப்படி குற்றமாகக் கருதப்பட்டு தண்டனை வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

## தேர்தல் பிரசார நடவடிக்கைகள் 18ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவு

கொழும்பு, செப். 14

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் எதிர்வரும் 18ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவுபெற வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு எதிர்வரும் 21ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் எனவும், மாலை 4 மணிவரை வாக்களிக்க முடியும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 13 ஆயிரத்து 417 வாக்களிப்பு நிலையங்களை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நிகழ்வொன்றில் தாக்குதல்!

கொழும்பு, செப். 14

தேசபக்தி தேசிய முன்னணியினால் தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தேசபக்தி தேசிய முன்னணியின் தேசிய உறுப்பினர் சட்டத்தரணி நுவான் பெல்லன்துடாவ, குறித்த நிகழ்வில் உரையாற்றும்போது ஜே.வி.பி தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

அதன்போது குறித்த குழுவினர், அங்கிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன், பேச்சாளருக்கும் இடையூறு விளைவித்திருந்தனர்.

எவ்வாறாயினும், நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அந்த குழுவினரை அங்கிருந்து வெளியேற்றியிருந்தனர்.

பின்னர், பொலிஸார் சம்பவ இடத்துக்குப் பிரவேசித்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் குழுவே இந்தத் தாக்குதலை நடத்தியதாகச் சட்டத்தரணி நுவன் பெல்லன்துடாவ குற்றஞ்சாட்டியுள்ளார். (அ)

# சில பொலிஸ் அலுவலர்களால் தேர்தல் சட்டங்கள் அலட்சியம்

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 14

பொலிஸ் தலைமையகத்தை சேர்ந்த சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேர்தல் சட்டங்களை புறக்கணிக்கின்றனர் என பவ்ரல் முறைப்பாடு செய்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்புக்கு முன்னதாக நாட்டில் பொலிஸ்மா அதிபரோ அல்லது பதில் பொலிஸ்மா அதிபரோ இல்லாதபோதிலும் பொலிஸார் சட்டம் ஒழுங்கை பேணுவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்றுள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல், அதேவேளை சில அதிகாரிகள் தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்த தவறுவது குறித்து கரிசனை வெளியிட்டுள்ளது.

பதுளை, வவுனியாவின் பொலிஸ் தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்த தவறுகின்றனர் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவருக்கு தெரிவித்துள்ளார்.

2024 ஜனாதிபதி தேர்தலின்போது சட்டமொழுங்கை பேணுகின்றமைக்காக நாங்கள் பொலிஸாரை பாராட்டுகின்றோம். பொலிஸ்மா அதிபரோ பதில் பொலிஸ்மா அதிபரோ இல்லாமல் அவர்கள் செயற்படுகின்றனர். தேர்தலுக்கு பொறுப்பான சிரேஸ்ட பொலிஸ்மா அதிபரின் செயற்பாடுகளை நாங்கள் அங்கீகரிக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவின் பொலிஸ் தலைமையகத்தின் தலைமை பொலிஸ் பரிசோதகர் சட்டவிரோத சுவரொட்டிகள் போன்றவற்றை அகற்றுவது குறித்து அக்கறை காட்டவில்லை. தேர்தல் அதிகாரிகளின் உத்தரவுகளை அலட்சியம் செய்கின்றனர் என அவர் கூறியுள்ளார். (அ)

# சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட மருந்துகளுடன் இந்தியப் பிரஜை கைது!

கொழும்பு, செப். 14

சட்டவிரோதமான முறையில் புற்றுநோய் தடுப்பு மருந்துகளை இலங்கைக்கு கொண்டு வந்த இந்தியப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெங்களூரில் இருந்து நாட்டுக்கு வந்த போது இவர், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட மருந்துப் பொருட்கள் சுமார் 25 இலட்சம் ரூபாய் பெறுமதி வாய்ந்தவை.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்கப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.